www.padippakam.com

காங்கிரசுக்குக் கொள்ளி வைக்கும் கோஷ்டி சண்டை

15 பிப். 1995 ☐ ரூ. 3.00

# புதிய ஜனநாயகம்




படிப்பகம்

www.padippakam.com

# ''சிவானந்தா ஸ்டீல்ஸ்'' பயிற்சி தொழிலாளர்கள் போராட்டம்

சென்னை, அம்பத்தூர் தொழிற்பேட்டையில் ''சிவானந்தா ஸ்டீல்ஸ்'' என்கிற தனியார் நிறுவனம் மாதந்தோறும் 5000 டன் இரும்பை உருக்கி செய்யும் உற்பத்தி பொருட்களை ஏற்றுமதி செய்து வருகிறது. கோவையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் இந்நிறுவனம் கோடிக்கணக்கில் லாபமீட்டி வருவதோடு பாண்டிச்சேரியில் இதே பெயரிலும் ''சுமங்களா ஸ்டீல்ஸ்'' என்ற பெயரிலும் ஆலைகள் நிறுவி விரிவாக்கி வருகிறது. சிவானந்தா நிறுவனத்திற்கு ஐ.எஸ்.ஐ. 9000 அங்கீகாரம் வழங்க இருக்கிறார்கள். பயிற்சி தொழிலாளர்களை இந்நிறுவனம் சுரண்டுவதும் நடத்தும் விதமும் மிகவும் கொடுமையானது.

ஆலை நிர்வாகம் சட்டப்படி, நிரந்தர தொழிலாளர்களில் மூன்றில் ஒரு மடங்கு பயிற்சி தொழிலாளர்களை வைத்துக் கொள்ளலாம். ஆனால் சென்னை சிவானந்தா ஆலையில் நிரந்தரத் தொழிலாளர்களைக் (300 பேர்) காட்டிலும் பயிற்சி தொழிலாளர்கள் (600 பேர்) இரண்டு மடங்கு உள்ளனர். தொழிலாளர்கள் இதற்கெதிராக அரசிடமும், தொழிலாளர் நீதிமன்றத்திலும் முறையிட்டும் பயனில்லை. மேலும் அரசாங்கமே போக்குவரத்திலும், தொழிற்சாலைகளிலும் பயிற்சி தொழிலாளர்கள் என்று ஒரு ஆண்டு வைத்து குறைந்த சம்பளத்தில் (ரூ. 850) வேலை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு அனுப்பி விடுவதால் தனியார்கள் செய்யும் கொடுமை இன்னும் அதிகமாக உள்ளது.

சிவானந்தா நிர்வாகமோ பயிற்சி தொழிலாளர்களுக்கு 650 ரூபாய் சம்பளம் கொடுத்தும், மருத்துவ வசதி (இ.எஸ்.ஐ) அட்டை வழங்காமலும், உணவகத்தில் மட்டரகமாக தனி சாப்பாடு ஒதுக்கியும், போனஸ், சேம நலநிதி போன்றவை வழங்காமலும் ஏய்த்து வருகிறது. வேலைப் பளுவால் தினம் தினம் பயிற்சி தொழிலாளர்கள் வெளியேறுவார்கள்; புதிது புதிதாகவும் சேர்க்கப்படுகிறார்கள். ஆலை தொடங்கி சுமார் 25 ஆண்டுகளாக நடந்து வருகிறது. நிர்வாகம் தனக்குச் சாதகமாக யாராவது ஒருவரை எப்போதாவது நிரந்தரம் செய்யும். திறமையுள்ள தொழிலாளர்களாக இருந்தாலும் 2,3 ஆண்டுகளில் வெளியேற்றி விடும்.

கடந்த காலங்களில் போலி கம்யூனிஸ்டுகளின் CITU சங்கமானது, பயிற்சி தொழிலாளர்களைப் பற்றி வாய் திறக்க மாட்டேன் என்று ஒத்துக் கொண்டே நிரந்தர ஊழியர்களுக்கான பல சலுகைகளைப் பெற்று தந்தது. 10 மாதங்களுக்கு முன் நடந்த சங்கத் தேர்தலில் சி.ஐ.டி.யு. சார்பில் போட்டியிட்ட ஜே.எல். வின்சென்ட், அம்பேத்கர் மக்கள் விடுதலை முன்னணி (APLF) யின் மாநிலத் தலைவர் எம்.மூர்த்தியிடம் தோற்றுப் போனார். தற்போது வின்சென்ட் சி.ஐ.டி.யு-க்குப் போட்டியாக தொழிற்சங்க சம்மேளம் (FTU) என்ற பெயரில் தொழிற்சங்கத் தொழில் நடத்தி வருகிறார்.

டிசம்பர் முதல்வாரத்தில் பயிற்சி தொழிலாளர்களிடையே சம்பள உயர்வு கோரி போராட வேண்டும் என்ற முடிவு தன்னெழுச்சியாக உருவாகி, ஏ.பி.எல்.எப். தலைவர் மூர்த்தியைச் சந்தித்துள்ளனர். இவர் பிறரைக் கைகாட்டி நழுவிக் கொண்டார். சங்கத் துணைத் தலைவர் கல்யாண சுந்தரமோ நிர்வாகத்தின் குரலாகப் பேசி அவமானப்படுத்தி அனுப்பியுள்ளார். பிறகு தி.மு.க. சங்கமான எல்.பி.எப்.ன் பகுதி பொதுச் செயலாளர் செல்வராசைச் சந்தித்து சங்கம் அமைத்து கோரிக்கையை வென்று தரும்படி கோரினர். முதலில் மறுத்து, பிறகு மூர்த்தியிடம் ஒப்புதல் பெற்றுக் கொண்டே சங்கம் தொடங்க ஒத்துக் கொண்டார்.

கடந்த 5.12.94 அன்று முதலாமாண்டு, இரண்டாம் ஆண்டு தொழிலாளர்கள் சுமார் 500 பேர் வேலை நிறுத்தத்தைத் தொடங்கினர். மறுநாள் ஆலைவாயில் முன் திரண்ட தொழிலாளர்களிடத்தில் ஏ.பி.எல்.எப்-ன் சங்கமான எஸ்.எஸ்.இ.யு-வினர் நிர்வாகத்தின் ஊதுகுழல்களாக வந்து பேசினார்கள். பயிற்சி தொழிலாளர்களின் புதிய சங்கத்தை ஏ.பி.எல். மூலமே அழிக்க முயன்றது. நிர்வாகம். எனினும் தொழிலாளர்கள் உறுதியுடன் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்ததோடு ஆர்ப்பாட்டமும் நடத்தினர். தி.மு.க. தொழிற்சங்கத் தலைவர் செல்வராசு அரசியல்வாதிக்கே உரிய தோரணையில் வந்திறங்கி ''கொடியேற்றம் நடக்கும், பேச்சுவார்த்தை நடக்கும்'' என்றெல்லாம் வாக்குறுதி கொடுத்தார்.

புதிய சங்கம் உருவாகாமல் தடுக்கும்பொருட்டு அன்று மாலையே நிர்வாகத்திற்கும் ஏ.பி.எல்.எப். தலைவர் மூர்த்திக்கும் இடையே இரகசிய பேச்சுவார்த்தை நடந்தது. அன்றிரவு திருமுல்லைவாயில் தி.மு.க. வட்ட செயலாளர் கோபி மற்றும் இன்னொருவர் மூலம் செல்வராசிற்கு தூது விட்டு போராட்டத்திலிருந்து விலகும்படி நிர்பந்தித்தனர். அவர் மனைவியைச் சந்தித்து மிரட்டவும் செய்தனர். செல்வராசும் கோழைத்தனமாக விலகிக் கொண்டார். கொடியேற்றமும் நடத்தவில்லை. நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தையும் நடத்தவில்லை. பயிற்சி தொழிலாளர்களின் உறுதியான போராட்டத்தைக் கண்ட மூர்த்தி எங்கே தனது தொழிற்சங்கத் தலைமைக்கு பங்கம் வந்துவிடுமோ என அஞ்சி சிறிதே மூக்கை நுழைத்தார். தம்பி பைலட் கோபியை அனுப்பி நிர்வாகத்திடம் பேச்சுவார்த்தை நடத்தினார். நிர்வாக மேலாளரின் தாயார் இறந்துவிட்ட காரணத்தால் பேச்சுவர்த்தை 21.12.94-க்கு தள்ளி வைத்துள்ளதையும், 14-ந் தேதிக்குள் போராட்டத்தைக் கைவிட்டு வேலைக்குத் திரும்பவில்லையெனில் நிர்வாகம் உங்களை வேலைநீக்கம் செய்துவிடும் என்பதையும் கோபி தெரிவித்துச் சென்றுவிட்டார்.

போராடும் பயிற்சி தொழிலாளர்கள் ஓட்டுக் கட்சிகளின், பிழைப்புவாதிகளின் தலைமையை நிராகரித்து புரட்சிக்கரத் தலைமையில் புதிய தொழிற்சங்கத்தைக் கட்டியமைக்கவேண்டும். நிரந்தரத் தொழிலாளர்களின் ஆதரவைப் பெற்று போர்க்குணமிக்க போராட்டங்களைத் தொடுக்கும்போதே கோரிக்கைகளை வென்றெடுக்க முடியம் என்பதை உணர வேண்டும்.

**தகவல்: சமரேந்தி**

## சிவப்பஞ்சலி

மதுரை - தே. மீனாட்சிபுரம் விவசாயிகள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த தோழர் மலர்க்கொடி 6.1.95 அன்று மரணமடைந்தார். இளம் தோழரான அவர், வி.வி.மு-வின் பிரச்சார வேலைகள் அனைத்திலும் உற்சாகத்துடன் கலந்து கொண்டு வந்தார். குடும்பத்தில் உள்ள பல இடையூறுகளுக்கு மத்தியில் மாதக்கணக்கில் வீட்டை விட்டு வெளியே வந்து தங்கி இயக்க வேலைகள் செய்தவர். புரட்சிகர பண்பாட்டைத் தூக்கிப் பிடிக்கும் வண்ணம் பிற்போக்கு கலாச்சார முறைகளை, மூக்குத்தி, கம்மல் போன்ற ஆபரணங்களை உதறி எறிந்ததோடு பெண்களுக்கு நீண்ட சடை முடி கூட தேவையில்லை எனக் கருதி ஆண்களைப் போல முடிவெட்டிக் கொண்டார். இயக்கப் பணிக்கு உதவியாக இருந்த சிறந்த தோழரை ஒரு சாதாரண சின்ன நோய் கொன்று விட்டது. எந்த சடங்கு, சம்பிரதாயங்களும் செய்யாமல் சிவப்புத் துணியைப் போர்த்தி பாடையில் எடுத்துச் சென்று தோழர்கள் எரியூட்டினர். சுடுகாட்டில் இறுதி சடங்கிற்கு வந்திருந்த ஆண் - பெண் தோழர்கள், பகுதி பா.ம.க.வினர், நண்பர்கள் மத்தியில் தோழர்கள் செல்வராசு, மோகன் ஆகியோர் உரை நிகழ்த்தி அஞ்சலி செலுத்தினர்.



படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

பத்தாம் ஆண்டு

**5 - 6**

16 ஜன. - 15 பிப். '95

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.00
ஆண்டு சந்தா: ரூ. 72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

அட்டை ஓவியங்கள்: கரோ

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
இரா. சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# கத்தி எடுப்போம்! ரத்தம் சிந்துவோம்! ஏகாதிபத்திய மேலாதிக்கத் தளையறுப்போம்!

1995 ஜனவரி முதல் நாள் உலகின் பின்தங்கிய, ஏழை நாடுகள் அனைத்தினதும் வரலாற்றில் ஒரு கருப்பு நாள். மேலாதிக்க, மேல்நிலை வல்லரசுகளுக்கு இன்னுமொரு கொண்டாட்டமான நாள். அன்றுதான் இதுவரை உலக வியாபாரம் - பொருளாதாரத்தின் மீது ஆதிக்கம் செலுத்தி வந்த வரி மற்றும் வர்த்தகப் பொது ஒப்பந்தம் - 'காட்' என்னும் அமைப்பிற்கு பதிலாக சர்வ வல்லமை பொருந்திய ''உலக வர்த்தக நிறுவனம் - WTO'' என்னும் புது அமைப்பு நடப்புக்கு வந்தது. இனி உலக வங்கி, ஐ.எம்.எஃப். - சர்வதேச நிதி நிறுவனம் ஆகியவற்றோடு சேர்ந்து உலகப் பொருளாதாரத்தின் மீது மேலாதிக்கம் செலுத்தும் மூன்றாவது அமைப்பாக இது விளங்கும். இதற்கு ஒப்புக் கொண்ட 125 நாடுகளுள் இப்போது 85 நாடுகள் நிறுவன உறுப்புகளாகக் கைச்சாத்திட்டுள்ளன. இந்தியாவும் இவற்றில் அடங்கும்.

ஜனநாயகம் பற்றி வாய் கிழியப் பேசும் மேல்நிலை வல்லரசுகள், இந்த அமைப்பில் சேருவதற்கு அந்தந்த நாட்டு மக்களின் கருத்து கேட்பது மட்டுமல்ல, நாடாளுமன்ற ஒப்புதல் கூடத் தேவையில்லை; மந்திரி சபையின் இரகசியக் கூட்டத்தில் நிறைவேற்றினாலே போதும் என்று ஏற்றுக் கொண்டுவிட்டன. இதைப் பயன்படுத்திக் கொண்ட பாசிச சகுனி நரசிம்மராவ் அரசு, உலக வர்த்தக அமைப்பில் இணைவதற்கான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதற்காக இறுதி நாளன்று, இரவோடு இரவாக இரண்டு சட்டத்திருத்தங்களை அரசுத் தலைவரின் அவசர ஆணைகளாகப் பிறப்பித்தது. 1970-ஆம் ஆண்டு வடிவுரிமைச் சட்டத்துக்கு ஒரு திருத்தம் - அதன்படி, ஏகாதிபத்தியங்கள் விவசாய இரசாயனம், மருந்துப் பொருட்கள் உட்பட எதற்கும் வடிவுரிமை பதிவு செய்துகொள்வதோடு அவற்றுக்கு ஏகபோக விற்பனை அதிகாரமும் பெறும். 1975 சுங்கவரிச் சட்டத்துக்கு ஒரு திருத்தம் - அதன்படி ஏகாதிபத்தியங்கள் தமது பொருட்களை இங்கே குவித்து வைப்பதற்கு எதிரான சுங்கத் தீர்வை ரத்து செய்யப்படும். இவை இரண்டும் இந்த நாட்டுப் பொருளாதாரச் சந்தையை உடும்புப் பிடியாகக் கவ்விக் கொள்வதற்கு வழிவகை செய்வதாகும்.

தேர்தல் தோல்விகளாலும், கட்சிப் பிளவுகளினாலும் ஆட்டம் கண்டுள்ள பாசிச சகுனி நரசிம்மராவ் அரசு, கிடைத்தவரை சுருட்டிக் கொள்வது என்கிற அவசர கதியோடு ஏகாதிபத்தியங்களுடன் ஒப்பந்தங்கள் பலவும் போடுகின்றது. ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசு முகாமுக்கு வெளியே வளரும் ஏழு மிகப்பெரிய சந்தைகளில் நான்காவது இடத்தைப் பெற்றிருப்பது இந்தியா. ஆகவே மேல்நிலை வல்லரசுகளின் தொழில், வர்த்தக மந்திரிகளின் தலைமையில் பெரும் பன்னாட்டு தேசங்கடந்த தொழில் கழகங்களின் தலைவர்கள் பலரும் ஓடோடி வந்து ஒப்பந்தங்கள் போடுகின்றனர். உலக வர்த்தக அமைப்பு நடப்புக்கு வந்த ஒரு வந்த அமெரிக்க வர்த்தக மந்திரி ரான் பிரௌன் 18,000 கோடி ரூபாய்க்கு தொழில் ஒப்பந்தங்களுக்கு கையொப்பமிட்டு காரியத்தைத் துவங்கிவிட்டார். முக்கியமாக தென்னிந்தியாவிலும் வங்கத்திலும் எரிசக்தி, பெட்ரோலியம், செய்தித் தொடர்பு ஆகிய துறைகளில் நுழையும் அமெரிக்காவுக்கு, இதுவரை மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கையை எதிர்ப்பதாக நாடகமாடிய கர்நாடகா ஜனதாதள, ஆந்திர தெலுங்கு தேச, மேற்கு வங்க இடதுசாரி கூட்டணி முதல்வர்கள் சிகப்புக் கம்பளம் விரித்து வரவேற்றுள்ளனர்.

உலக வர்த்தக அமைப்பு என்பது உலகின் தேசிய அரசுகளுக்கு மேல் இன்னொரு அரசாக இருந்து செயல்படும். இதுவரை ''காட்'' அமைப்பு செய்து வந்த பொருள் வர்த்தகத்தோடு விவசாயம், ஜவுளித் துறைகளும், காப்பீடு, சுற்றுலா போன்ற சேவைத் துறைகளும் கூட இதன் கட்டுப்பாட்டின் கீழ்வரும். வடிவுரிமை, பதிப்புரிமை, முத்திரை - பெயர் உரிமை போன்ற அறிவுச் சொத்துரிமைகளின் பாதுகாப்பு என்கிற பெயரில் தொழில்த் துறையோடு ஏழை, பின்தங்கிய நாடுகளின் அறிவியல் - தொழிநுட்ப உரிமை முழுவதுமாகப் பறிக்கப்படும். இவற்றுடன் இந்நாடுகளில் விவசாயம் -தொழில்களுக்கும் ரேசன் முதலிய பொது விநியோகத்துக்கும் வழங்கப்படும் மானிய விதிகள் அமுலாவதையும் மேற்பார்வையிடும். இந்த வகையில் நாடுகளிடையே எழும் தகராறுகளுக்குத் தீர்ப்பு வழங்கும் ''நடுவர்'' மன்றமாகவும் இருக்கும். ஆனால் பொருளாதாரம் உலகமயமாவதால் உலக வர்த்தகமும் ஏற்றுமதியும் அந்நியச் செலாவணியும் அதிகமாகும் என்று ஏகாதிபத்தியமும் அதன் தாசர்களும் வாதிடுகின்றனர். இன்னும் பத்தாண்டுகளில் ஆண்டு உலக வர்த்தகம் 15,30,000 கோடி ரூபாயாக உயரும் என்கின்றனர். இந்த மதிப்பீடு சரியானதுதானென்று ஏற்றுக் கொண்டாலும், அதனால் பின்தங்கிய, ஏழை நாடுகளுக்குக் கிடைக்கும் ஆதாயம் சொற்பமே! அப்போதும் மொத்த ஆண்டு வர்த்தகத்தில் இந்தியாவின் பங்கு 0.5 சதவீதம் மட்டுமே இருக்கும். ஆனால் அமெரிக்காவின் பங்கு 24 சதவீதமாக அதாவது 3,66,000 கோடியாகவும், ஐரோப்பிய சமூக நாடுகளின் பங்கு 32 சதவீதமாக அதாவது 4,89,000 கோடியாகவும், ஜப்பானின் பங்கு 5.2 சதவீதமாக அதாவது 80,000 கோடி ரூபாயாகவும் இருக்கும். இவ்வளவு பெரும்கொள்ளையை நிரந்தரமாக்கவும், நிறுவனமாக்கவும் வந்ததுதான் உலக வர்த்தக அமைப்பு.

கத்தியன்றி, இரத்தமின்றி ஏகாதிபத்திய காலனிய ஆதிக்கத்தில் இருந்து அறவழி பேரங்கள் மூலம்தானே 'சுதந்திரம்' பெற்றோம்! அதனால்தான் கிளைவும், டூப்ளேயும் செய்ததைப் போலத் துப்பாக்கிகளும் பீரங்கிகளும் கொண்டு படையெடுக்காமலேயே அதாவது கத்தியின்றி, இரத்தமின்றியே மேல்நிலை வல்லரசுகளின் மறுகாலனிய மேலாதிக்கமும் நிலைநாட்டப்படுகிறது. ஆகவே இந்தமுறை ஏமாறமாட்டோம். கத்தியெடுப்போம், இரத்தம் சிந்துவோம், மறுகாலனிய மேலாதிக்கத்திடமிருந்து உண்மையான விடுதலை பெறுவோம்.

படிப்பகம்

www.padippakam.com

# சர்வ கட்சியும் லஞ்ச-ஊழல் சி.பி.ஐ.-யிடம் சிக்கிய 'டயரி'

பாகிஸ்தானின் கருவியாக இயங்கும் காஷ்மீர் தீவிரவாதக் குழு ஹிஸ்புல் முஜாகிதீன். அதன் உளவுத் துறைத் துணைத்தலைவர் எனப்படும் அஷ்ஃபக் உசைன் லோன் மற்றும் டெல்லி நேரு பல்கலைக்கழக மாணவர் சஹாபுதீன் கௌரி ஆகிய இருவரையும் 1991-ம் ஆண்டு மே மாதம் இந்திய மத்தியப் புலனாய்வுக் கழகம் (சி.பி.ஐ) கைது செய்தது. அவர்கள் இருவரும் வெளிநாடுகளில் இருந்து வரும் "கடத்தல் பண"த்தை காஷ்மீர் தீவிரவாதிகளுக்குக் கைமாற்றித் தருபவர்கள் என்கிற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். "பணம் கடத்தல்" தொழிலில் ஈடுபட்டுள்ள நான்கு நபர்களின் பெயர்களை விசாரணையின் போது அவர்கள் தெரிவித்தார்கள். அவர்களையும் கைது செய்து ஆறு பேரையும் "தடா" சட்டத்தின் கீழ் சிறையில் தள்ளியது, சி.பி.ஐ

இந்த வழக்கு விசாரணையின் போது, இன்னொரு "பணம் கடத்தல்" தொழிற்காரன் சுரேந்திரா ஜெயின் பெயரும் தெரியவர அவனது இருப்பிடம் சி.பி.ஐ சோதனைக்குள்ளானது. ரொக்கமும், அந்நியச் செலாவணியாக சில லட்சம் ரூபாயும், பங்குபத்திரங்களும், 4500 கிலோ தங்கமும் கைப்பற்றப்பட்டன. "பணம் கடத்தல்" தொழில் செய்யும் ஒருவனிடம் இவ்வளவு தொகை இருப்பது ஒன்றும் அதிகமில்லை. இதைவிட விலை மதிக்கமுடியாத ஒரு குறிப்பேடு (டயரி) சி.பி.ஐ. யிடம் சிக்கியது.

இந்த சுரேந்திரா ஜெயின் "பணம் கடத்தல்" தொழில் செய்பவன் மட்டுமல்ல, தொழிலதிபர்களுக்கும் அரசு எந்திரத்துக்கும் இடையே முக்கியமான தொடர்பாளன் - தரகன். அந்த வகையில் கடந்த சில ஆண்டுகளில் அரசு நிர்வாக அமைப்பில் உள்ள பெரும்புள்ளிகள் ஒவ்வொருவருக்கும் எப்போது, எவ்வளவு ரூபாய் லஞ்சம் கொடுத்தான் என்கிற விவரம் முழுவதும் சி.பி.ஐ.யிடம் சிக்கிய அவனது குறிப்பேட்டில் இருக்கிறது.

லஞ்சம் வாங்கியவர்களின் பெயர்கள் முழுவதுமாகவோ, சுருக்கமாகவோ எழுதப்பட்டுள்ள அக்குறிப்பேட்டின் புகைப்பட பிரதிகள் மூன்றாண்டுகளுக்கு மேலாக பத்திரிக்கையாளர்களிடையே பகிரங்கமான சுற்றில் இருக்கின்றன. அதிகாரத்தில் பங்கேற்ற எல்லா கட்சிகளின் தலைவர்களும், முக்கிய உயர் அதிகாரிகளும் இந்த லஞ்சப் பட்டியலில் இருக்கின்றனர். இதன் காரணமாகவே இந்த குறிப்பேடு, அதன் உடமையாளன் சுரேந்திரா ஜெயின் பற்றிய வழக்கின் மீது அனைத்துத் தரப்பினரும் திட்டமிட்டு, கூட்டாக மௌனம் சாதிக்கின்றனர். இந்த வழக்கைக் கிடப்பில் போட்டுவிட்டு, கைதான நான்கு "பணம் கடத்தல்" தரகர்களையும் விடுதலை செய்து விட்டது, சி.பி.ஐ. இதற்கு மிக முக்கியமான இன்னொரு காரணம் சி.பி.ஐ.யின் இயக்குநராக சமீப காலம் வரை இருந்த விஜய் கரணும் லஞ்சம் வாங்கியவர் பட்டியலில் இருப்பது தான்.

ஆனால் கூட்டுக்களவாணித்தனம் செய்யும் பங்காளிடையே எழும் வழக்கமான சண்டை இந்த விவகாரத்திலும் வெடித்துவிட்டது. இதனால் பல்வேறு வழக்குகளிலும் குற்றவாளிகளைத் தப்பிவிப்பதில் வெற்றி பெற்று வரும் சி.பி.ஐ-க்கு இந்த வழக்கில் அந்தக் காரியம் அவ்வளவு எளிதாக முடியாமல் நீடிக்கிறது. ஜெயினுடைய குறிப்பேட்டில் 'வி.கே' என்று குறிப்பிடப்படுவது சி.பி.ஐ இயக்குநர் விஜய் கரணைத்தான்; அவர் டெல்லி நகர போலீசு ஆணையாளராக இருந்த போது ரூ.90 லட்சம் லஞ்சம் வாங்கியதைத் தான்" என்று சி.பி.ஐ-யின் துணை இயக்குநர் ஓ.பி. சர்மா அடையாளம் காட்டுகிறார். அவரும் அதே ஜெயினிடம் இருந்து ரூ.50 லட்சம் முதல் தவணையாகப் பெற்றுக் கொண்டு, ரூ.10 லட்சம் இரண்டாவது தவணையாகப் பெறும் போது கையும் களவுமாகப் பிடிபட்ட பிறகே சி.பி.ஐ. இயக்குநரை அடையாளங் காட்டினார். இந்த வழக்கை இரகசியமாக மூடிவிடுவதற்காக சர்மா லஞ்சம் வாங்கினார் என்று இப்போது தரகன் ஜெயின் சாட்சியம் கூறுகிறான். சர்மாவோ 35 ஆண்டு பணியில் கறைபடாதவர், ஒரு வழக்கைத் தவிர எடுத்துக் கொண்ட வழக்குகள் அனைத்தையும் வெற்றிகரமாக முடித்தவர்; பழிவாங்குவதற்காக அவர்மீதே வழக்கு ஜோடிக்கப்பட்டிருக்கிறது என்பது அவருடைய தரப்புவாதம்.

சி.பி.ஐ. இயக்குநர் விஜய்கரண்; மாயை கலைந்தது



"இந்த வழக்கை சி.பி.ஐ. வேண்டுமென்றே முடக்கி வைத்திருக்கிறது; அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கோரி உச்ச நீதி மன்றத்திடம் ஓ.பி.சர்மா மற்றும் வினீத் நாராயண், ராஜிந்தர் பூரி ஆகிய இரண்டு பத்திரிகையாளர்கள் பொதுநலன் வழக்குத் தொடுத்துள்ளனர். இந்த வழக்கும் விசாரிக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

சுரேந்திரா ஜெயின் வழக்கில் இருந்து மூன்று முக்கிய அம்சங்கள் தெளிவாகத் தெரிகின்றன.

- தேர்தல் அரசியல் கட்சிகள் எல்லாவற்றின் தலைவர்களும் விதிவிலக்கின்றி லஞ்ச ஊழல்களில் ஈடுபடுபவர்களாக உள்ளனர். இதனால் ஒவ்வொரு முறை லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு வரும் போதும் "நீ மட்டும் யோக்கியமா?" என்று கேட்டு ஒருவரை ஒருவர் மடக்க முடிகிறது. அப்படிக் குற்றஞ்சாட்டும் தார்மீக உரிமையை அனைவருமே இழந்து விட்டனர். அதாவது லஞ்சம் சர்வகட்சிமயமாகிவிட்டது.

- மிகவும் சிக்கலான வழக்குகள் எதுவானாலும் சரி; உள்ளூர் அதிகாரிகள், ஆட்சியாளர்கள், பெரும் செல்வர்கள் சம்பந்தப்பட்டதானாலும் சரி; உள்ளூர் போலீசு மீது நம்பிக்கை இல்லாமல் போனாலும் சரி; நாட்டிலேயே திறமை வாய்ந்ததும், சமரசமின்றி உறுதியான நடவடிக்கை எடுக்கக் கூடியதுமான சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என்று இப்போதும் பலரால் கோரப்படுகிறது. ஆனால் சி.பி.ஐ-கூட லஞ்ச ஊழலில் சிக்காத நிறுவனம் அல்ல; குற்றங்களை மூடிமறைத்து, குற்றவாளிகளைத் தப்புவிப்பதும், நிரபராதிகளுக்கு எதிராக வழக்குகளை ஜோடிப்பதும் ஆகிய பணிகளில் தான் சி.பி.ஐ. இப்போது ஈடுபட்டுள்ளது. அது ஒரு இரகசிய, உளவுத் துறை அமைப்பாக இருப்பதால் சட்டவிரோத, சமூகவிரோத, நாட்டு விரோத கிரிமினல் குற்றங்களைச் செய்வதும் தப்பித்துக் கொள்வதும் எளிதாக நடக்கிறது.

- சர்வ கட்சித் தலைவர்களும்,



படிப்பகம்

www.padippakam.com

சி.பி.ஐ., ரா., ஐ.பி. ஆகிய உளவுத்துறை, இராணுவ உயர் அதிகாரிகளும் நாட்டின் நலன்கள் எதையும் விட்டுக் கொடுக்காத நாட்டின் காவலர்கள் என்று பீற்றிக் கொள்ளுகிறார்கள். ஆனால் சுரேந்திரா ஜெயின், திருவனந்தபுரம் ராக்கெட் உளவு விவகாரம் போன்ற வழக்குகளில் நாட்டுக்கு விரோதச் செயல்கள் நடந்திருப்பதாகச் சொன்னாலும் தக்க நடவடிக்கை எடுக்க மறுக்கின்றனர்.



சுரேந்திரா ஜெயினிடம் பணம் பெற்ற ஹிஸ்புல் முஜாகிதீன் குழுவினர்

திருவனந்தபுரம் ராக்கெட் இரகசியத் திருட்டு உளவு வழக்கில் இரு வெளிநாட்டுப் பெண்களும், இரு விஞ்ஞானிகளும் மட்டும் சம்பந்தப்பட்டிருப்பதாக தெரியும் வரை கேரள போலீசு தீவிரம் காட்டியது. இந்த உளவு வேலையில் ராமன் ஸ்ரீவத்சவ் என்கிற கேரள போலீசு துணை இயக்குநர் ஈடுபட்டிருந்தார் என்று அறிந்ததும், வழக்கில் போதிய ஆதாரம் இல்லை என்று கூறி அவரை விடுவிக்கும் முயற்சியில் இறங்கியது. ஒரு பொது நல வழக்கு மூலம் மீண்டும் உயர் நீதிமன்ற விசாரணை நடந்த போது சி.பி.ஐ-யின் தகிடுதத்தம் வெளியானது.

சுரேந்திரா ஜெயின் வழக்கில் சர்வதேச மஃபியா கும்பல் சம்பந்தப்பட்டிருக்கிறது; பாகிஸ்தானின் கருவியான ஹிஸ்புல்லா முஜாகிதீனுக்கு வெளி நாட்டில் இருந்து நிதி வந்திருக்கிறது; அது சுரேந்திரா ஜெயினுக்கு லண்டனில் இருந்து கொண்டு பணம் மற்றும் போதைப் பொருள் கடத்தல் தொழில் செய்யும் மோகினி ஜெயின் மூலம் வந்திருக்கிறது. அது துபாயில் தங்கியுள்ள பிரபல பம்பாய் மஃபிய கும்பல் தலைவன் தாவூத் இப்ராகிமுடன் தொழில் தொடர்புடைய தாரிக் பாய் என்னும் பாக் உளவு மற்றும் கடத்தல்காரனால் அனுப்பப்பட்டது.

ஆனால் சுரேந்திரா ஜெயின் மீது நடவடிக்கை எடுக்குமளவு ஆதாரம் இல்லை என்று கூறுகிறது சி.பி.ஐ. ''அவர் சாம்பு தயாள் சர்மா மற்றும் பிற பணம் கடத்தல்காரர்களிடம் இருந்து பணம் பெற்றார் என்றுதான் ஆதாரம் இருக்கிறது; அவரே பணம் கடத்தல்காரன் என்று கூறமுடியாது'' என்று மழுப்புகிறது. ''தடா'' சட்டப்படி பயங்கரவாதிகளால் சாட்சியமளிக்கப்படும் எவரையும் கைது செய்வதற்கு அதிகாரம் உண்டு எனக் கூறி ஆயிரக்கணக்கான அப்பாவிகளை சிறையிலடைத்திருக்கிறார்கள். ஆனால் காஷ்மீர் பயங்கரவாதிகளால் அடையாளங்காட்டப்பட்ட சுரேந்திரா ஜெயின் மீது கைது நடவடிக்கையே கிடையாது. இது ஏன் என்று கேட்டு, தனி நீதி விசாரணைக்கு உத்திரவிடப்போவதாக உச்ச நீதிமன்றமே எச்சரித்தது. தானே தலையீட்டு விசாரிப்பதாக சி.பி.ஐ. புது இயக்குநர் விஜய ராமராவ் உறுதி கூறியுள்ளார். ஆனால் சி.பி.ஐ. அதிகாரிகளும் சர்வ கட்சித் தலைவர்களும் ஜெயினிடம் லஞ்சம் வாங்கியிருப்பதால்தான் இந்த வழக்கு முடக்கப்பட்டுள்ளது. ''அந்நிய சதி'' என்றும் ''பாக். நாசவேலை'' என்றும் மூச்சுக்கு முன்னூறு தடவை கூச்சலிடும், அரசு இந்த வழக்கில் எந்த நடவடிக்கையும் எடுக்க மறுக்கிறது. இதுதான் அவர்களது 'நாட்டுப் பற்று'!

★★★

அரசு அமைப்பின் அடிமுதல் முடி வரை புழுத்துப்போன இப்படிப்பட்ட லஞ்ச உழல்கள் நமது நாட்டில் இப்போது பழகிப்போன ஒன்றாகிவிட்டது. பிடிபட்டு விடுவோமே என்ற பயமோ, பிடிபட்டு விட்டோமே என்ற அதிர்ச்சியோ இப்போது லஞ்ச ஊழல் பேர்வழிகளுக்குக் கிடையாது. அவர்கள் இப்போது கொஞ்சமும் கூச்ச நாச்சமின்றி நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு பவனி வருகிறார்கள்.

> கைதான நான்கு ''பணம் கடத்தல்'' தரகர்களையும் சி.பி.ஐ. விடுதலை செய்து விட்டது. இதற்கு முக்கிய காரணம் சி.பி.ஐ.யின் இயக்குநராக சமீபகாலம் வரை இருந்த விஜய்கரணும் லஞ்சம் வாங்கியவர் பட்டியலில் இருப்பதுதான்.

இந்திரா காந்தி காலத்தில் பத்துக் கணக்கான கோடி ரூபாய் அளவுக்கிருந்த லஞ்ச ஊழல் அவரது வாரிசு ராஜீவ் காலத்தில் நூற்றுக்கணக்கான கோடி ரூபாயாகவும் நரசிம்மராவ் காலத்தில் ஆயிரக் கணக்கான கோடியாகவும் உயர்ந்து விட்டது. நாடு எந்தத் துறையிலும் முன்னேறவில்லை என்று இனி யாருமே குறைகூற முடியாது!

பொதுத்துறைத் தொழில்களின் பங்குகளைத் தனியாருக்கு முதல் சுற்று விற்றதில் மட்டும் 8000 கோடி ரூபாய் ஊழல் நடந்திருப்பதாக கட்டுப்பாடு மற்றும் தணிக்கைப் பொது மேலாளர் அறிக்கை கூறுகிறது. தாராளமயமாக்கல் கொள்கை உண்மையில் தொழில் முன்னேற்றத்தைப் பெருக்காவிட்டாலும் லஞ்ச ஊழலைப் பன்மடங்கு பெருக்கி உள்ளது எனலாம். சர்க்கரை இறக்குமதி ஊழலில் மட்டும் ரூ.5000 கோடி வரை ஊழல் நடந்திருக்கிறது. தொலைத் தொடர்புத்துறை மந்திரி சுக்ராம் தனது உறவுக்காரர்களுக்கு மட்டும் 500 கோடி ரூபாய்க்கு ''காண்ட்ராக்ட்'' மூலம் ஒதுக்கிக் கொடுத்தார். ரயில்வே மந்திரி ஜாபர் செரீப் 2000 கோடி ரூபாய்க்கு பிரௌன் போவெரி கம்பெனியிடம் இருந்து ரயில் எஞ்சின்கள் வாங்கியதில் ஊழல் செய்தார் - இவை இந்த அரசின் லஞ்ச ஊழல்களில் ஒரு சிலதாம்.

பத்தாண்டுகளுக்கு முன்பு



படிப்பகம்

www.padippakam.com

(1980-81 இல்) 5 சதவீதமாக இருந்த லஞ்சக் கமிஷன் பத்தாண்டுகளில் (1990-91 இல்) 7 சதவீதமாக உயர்ந்து விட்டது. இதையே தொகையில் சொன்னால் கடந்த பத்தாண்டுகளில் மத்திய அரசு லஞ்சக் கமிஷன் மட்டும் 3036 கோடி ரூபாயில் இருந்து 19, 414 கோடி ரூபாயாக உயர்ந்து விட்டது. இது போலிக் கம்யூனிஸ்டு கட்சிகளின் ஆதரவு பொருளாதார நிபுணர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ''மாற்றுப் பொருளாதாரக் கொள்கை தயாரிப்புக் கமிட்டி''யின் மதிப்பீடாகும்.

சரி! பண ஆதிக்கத்தையும், லஞ்ச ஊழலையும் ஒழிப்பதாகச் சொல்லி ஆட்சிக்கு வந்து தேசிய முன்னணி இடதுசாரிக் கூட்டணி கட்சிகளின் யோக்கியதை என்ன? இந்தியக் 'கம்யூனிஸ்டு' கட்சி (மா)வின் பெயர் மேற்குவங்கத்தில் சி.பி(எம்) என்பதற்குப் பதிலாக சி.பி. (மார்வாரி) என்றே அழைக்கிறார்கள். ஊழல் ஒழிப்புப் புனிதர் வி.பி.சிங் ஆட்சியில் துணைப் பிரதமராக இருந்த தேவிலால் முதல் அத்தனை மந்திரிகளின் பெயர்களும் தரகன் சுரேந்தரா ஜெயினுடைய லஞ்சப்பட்டியல் ''டயரி''யில் உள்ளது.

★★★

தேர்தல் செலவு மட்டும் ஒரு எம்.எல்.ஏ. தொகுதிக்கு ரூ.15 லட்சம் என்றும் ஒரு எம்.பி. தொகுதிக்கு ஒரு கோடி ரூபாய் என்றும் ஆகிவிட்டது. போட்ட இந்த ''முதலை'' எடுப்பதோடு அடுத்த தேர்தலுக்கும், எதிர்கால சொகுசு வாழ்வுக்கும் தேவையான தொகையைத் தேடிக் கொள்ள வேண்டும் என்ற 'இலட்சியத்தோடு' அரசியல்வாதிகள் செயல்படுகிறார்கள். மந்திரி பதவி பெறுபவர்கள் அதற்காகவும் கப்பம் கட்டுகிறார்கள். ஆகவே முடிந்தவரை சுருட்டி விடுவது என்று அலைகிறார்கள்.

தேர்தல்-செலவுகள் தவிர, இவர்கள் தமது வாழ்க்கையை 'மதிப்பாக' வைத்துக் கொள்வதற்கென்றே ஏராளமாக செலவு செய்கிறார்கள். மந்திரிகள் குறைந்தது 4,5, கார்கள், சொந்தத் தொகுதியில் ஒன்றும் தலைநகரில் ஒன்றும் கோடை - குளிர்கால ஓய்வு நகரங்களில் ஒன்றுமாக 'மாளிகை'கள் கட்டிக் கொள்கிறார்கள். ராம்விலாஸ் பஸ்வான் போன்ற ஒடுக்கப்பட்ட சமுதாயத் 'தலைவர்'களும் கூட இரண்டு மனைவிகள் - குடும்பங்களைத் தேடிக் கொள்கிறார்கள். இவர்களின் ஆடம்பர - சொகுசு வாழ்வோடு, அரசியல் தலைவர்கள் ஒவ்வொருவரும் தமக்கு விசுவாசமான ஒரு கூலிப்படையையும் அடியாள் வேலை - முகத்துதிக்காக வைத்திருக்கிறார்கள். இவர்களோடு மந்திரிகள் என்றால் எம்.பிக்கள், எம்.எல்.ஏக்கள், எம்.பி - எம்.எல்.ஏக்கள் என்றால் உள்ளூர் கட்சிப் பிரமுகர்கள் என்று தனக்கு ஆதரவு ஆட்களையும் வைத்திருக்கிறார்கள். இவ்வளவு பெரிய கும்பலுக்கு ஒவ்வொருவனும் தீனி போட்டு வளர்க்க வேண்டியுள்ளது.

முன்பு அர்ஜுன்சிங் பளிங்கு மாளிகையும், சத்தீஷ் சர்மா இத்தாலிய பளிங்குக் கல் பதித்த நீச்சல் குளமும், பல மந்திரிகள் மெஹ்ரலியில் பண்ணைவீடுகளும் கட்டிக் கொண்டதே கண்டனத்துக்குரிய செய்தியாக இருந்தது. இப்போது ஒரு மந்திரி ஒரு தொழிலதிபர் போல் வாழ்க்கை வாழ்கிறார். அப்புறம் நிரந்தர வருவாய் - சொத்துக்காக ஆட்டோ - வாடகைக்கார், வாடகை வீடுகள் - கட்டிடங்கள், சிமெண்ட் - பெட்ரோல் - உரம் - கார் விற்பனை உரிமம் முதல் ஆலைகளின் பங்குப் பத்திரங்கள் - ஆலைகள் வரை உடமையாகச் சேர்த்துக் கொண்டுள்ளனர். ஏராளமாக வெளிநாட்டு வங்கிகளில் குவித்தும் வைத்துள்ளனர்.

★★★



மகிழ்ச்சி கடலில் நீந்தும் ராவ்:
ஊழலில் புதிய சாதனை மன்னன்

இவ்வளவுக்கும் தேவையான லஞ்ச ஊழலின் வற்றா ஊற்றாகப் பல மத்திய, மாநில அமைச்சரகங்கள் உள்ளன. அவற்றில் இராணுவம், பெட்ரோலியம், எரிசக்தித் துறை ஆகியவை மூன்று முக்கியத் துறைகள். லஞ்ச ஊழலின் தங்கச்சுரங்கம் எனப்படும் இராணுவத்துறை மட்டும் ஆண்டுக்கு 23,000 கோடி ரூபாய்க்கு இராணுவத் தளவாடங்கள் வெளிநாடுகளில் வாங்குகின்றது. இதற்கு 15 முதல் 40 சதவீதம் வரை கமிசன் கிடைக்கிறது. 15 சதவீதக் கமிசன் என்று வைத்துக் கொண்டால் கூட 3,450 கோடி ரூபாய் லஞ்சமாகக் கிடைக்கிறது. சில வகை ஏவுகணைகள், பீரங்கிகள் ஒவ்வொன்றும் பல கோடி ரூபாய் ஆகிறது. கனரகத் தளவாடங்கள் மொத்தமாக வாங்கும் போதுதான் முக்கியக் கவனத்துக்கு வரும்; வெடிமருந்துப் பொருட்கள், உதிரி பாகங்கள், பழுது பார்ப்புகளுக்காக பெருந்தொகை செலவிடுவதை யாரும் கவனிப்பதில்லை. ஆகவே கமிசன் அடிப்பது எளிதாகவே நடக்கிறது. சோவியத் கூட்டமைப்பு கலைந்து போன பிறகு எப்படியாவது ரொக்கமாக அந்நியச் செலாவணி சம்பாதிக்க வேண்டும் என்கிற நிர்பந்தம் காரணமாக அந்நாடுகள் ஏராளமாக லஞ்சம் தருகின்றன.

இராணுவத்துக்கு அடுத்து, பெட்ரோலியம் துறை, ஆண்டுக்கு 20,000 கோடி ரூபாய் மதிப்புடைய பெட்ரோலியப் பொருட்கள் இறக்குமதியாகிறது. ஒவ்வொரு பீப்பாய்க்கும் கமிசன் உண்டு. மூன்று சதவீதம் கமிசன் என்றால் கூட 600 கோடி ரூபாய். இதுதவிர ஆழ்கடல் கிணறு தோண்டுதல் போன்ற ஒப்பந்தங்களுக்கும் கமிசன் உண்டு. அடுத்து எரிசக்தித் துறையில் மின் உற்பத்தி சாதனங்கள் முதல் நிலக்கரி இறக்குமதி வரை ஏராளமான லஞ்சம் பெற வாய்ப்புண்டு.

★★★

இப்படிப் பெருமளவு வளர்ந்த விட்ட லஞ்ச ஊழலை ஒழிப்பதற்கு இந்த அமைப்பில் வழி ஏதுமில்லை. ''லஞ்சம் உலகில் எந்த நாட்டில்தான் இல்லை. அது தவிர்க்க முடியாது'' என்று காங்கிரசின் பெருந்தலைவர் காமராஜ் முதல் இந்திரா, ராஜீவ் வரை அத்தனை பேரும் நியாயப் படுத்தித்தான் வருகிறார்கள். அதை ஒழிப்பதாகச் சொல்லி ஆட்சியைப் பிடித்த வி.பி.சிங், தனது மந்திரிசபையில் துணைப்பிரதமராக இருந்த தேவிலால், எரிசக்தி மந்திரி அரிஃப் முகமது, அருண் நேரு போன்றவர்களின் லஞ்ச ஊழலையே தடுக்க முடியவில்லை. அவரே தேர்தல் செலவுக்கு பெரும் முதலாளிகளிடம் இருந்து பணம் வாங்கியதாக ஒப்புக் கொண்டார். பெரு முதலாளிகள் அரசியல் கட்சிகளுக்கு லஞ்சமாக தேர்தல் நிதி - நன்கொடை தருவதை இந்திரா தடை செய்தார்; வெளிநாட்டுக் கம்பெனிகளுடன் பேரம் பேசுவதற்கு தரகர்களே கூடாது என்று ராஜீவ் தடை விதித்தார். இவற்றின் பொருள் ''இனி நேரடியாக நாங்களே தரகுப்பணத்தையும் சேர்த்து வாங்கிக் கொள்வோம்'' என்கிற அறிவிப்புதான் என்பது பின்னாளில் நிரூபணமானது.

இதற்கு (லைசென்சு - பர்மிட் - கோட்டா) உரிமம் - அனுமதி - ஒதுக்கீடு விதிகளின் அரசு அமைப்பாக இருப்பது தான் காரணம் என்று முன்பு காரணம் காட்டப்பட்டது. இன்றைய தாராளமயமாக்கலின் கீழ் லஞ்ச ஊழலும் தாராளமயமாகிவிட்டது. அதாவது ஒளிவுமறைவாக நடந்தது இப்போது பகிரங்கமாக நடக்கிறது. லஞ்ச ஊழல் நிரந்தரமாகிவிட்டதோடு நிறுவனமயமாகிவிட்டது. இந்த அரசு நிறுவனத்தையே தகர்க்காமல் லஞ்ச ஊழலை ஒழிக்க முடியாது.

● நந்தன்.



படிப்பகம்

www.padippakam.com

# கொடும்பாவி எரித்து உ.வ.க.விற்கு எதிர்ப்பு

டங்கல்-காட் ஒப்பந்தம் இந்த ஆண்டு ஜனவரி 1-ந் தேதி முதல் நடைமுறையாவதைக் கண்டித்தும் உலக வர்த்தகக் கழகத்தின் (WTO) ஒரு உறுப்புநாடாக இந்தியா இருப்பதைக் கண்டித்தும் மதுரையில் கொடும்பாவி எரிப்புப் போராட்டம் நடந்தது. ம.க.இ.க., பு.மா.இ.மு. தோழர்கள் உ.வ.க. என எழுதிய உருவ பொம்மையைக் கொளுத்தினர். சிம்மக்கல் பகுதியில் பேருந்து நிறுத்தம் அருகே சாலை மறியல் செய்தனர். தேசத்துரோக காங்கிரசு கும்பலை அம்பலப்படுத்தி முழக்கமிடப்பட்டது. 15 பேர் கலந்து கொண்டனர். போலீசு தோழர்களைக் கைது செய்து நீதி மன்றம் கொண்டு சென்றது. எந்தப் பிரிவில் வழக்குப் பதிவது என்று தெரியாமல் போலீசு குழம்பி நின்றது. வழக்கை விசாரித்த நடுவர் சொந்தப் பிணையின் மூலம் தோழர்களை விடுவித்தார்.

கம்பம் பகுதியில் 1-1-95 அன்று உ.வ.க. நடைமுறைக்கு வருவதை எதிர்ப்பு தெரிவித்து, நரசிம்மராவ் கொடும்பாவி கொளுத்தப்பட்டது. இதற்காக செய்யப்பட்ட பிரச்சாரத்தைக் கண்டு போலீசு வி.வி.மு தோழர்களைக் கைது செய்ய தேடியலைந்தது. பிரச்சாரத் தட்டிகளை எடுத்துச் சென்றது. வி.வி.மு. அலுவலகம், ஆதரவாளர்களின் வீடுகளில் தேடுதல் விசாரணை நடத்தப்பட்டது. ஆனால் திட்டமிட்டபடி புதுப்பள்ளி வாசல் முன் 50 பேர் குழுமி ஊர்வலமாக நரசிம்மராவ்வின் உருவ பொம்மையைக் கயிறு கட்டி இழுத்துச் சென்று முன்னாள்




எம்.எல்.ஏ. ராமகிருஷ்ணன் வீட்டிற்கு அருகில் கொளுத்தினர். தோழர்கள் சேகர், கதிரவன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். மக்கள் கூட்டமாக உள்ள பகுதியில் நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சி சிறந்த வரவேற்பைப் பெற்றது.

சென்னை சேத்துப்பட்டு பகுதியில் பு.மா.இ.மு., ம.க.இ.க., சார்பாக 1-1-95 அன்று உலக வர்த்தகக் கழகத்தின் கொடும்பாவியைப் பாடைக்கட்டி ஊர்வலமாக எடுத்துச் சென்று தெருமுனை கூட்டம் போட்டு பிறகு அம்பேத்கர் திடலில் கொளுத்தத் திட்டமிட்டனர். முதலில் ஒரு இடத்தில் தெருமுனைக் கூட்டம் முடிந்து இரண்டாவது இடத்தில் நடைபெறும்போது போலீசு குறுக்கிட்டு தடுத்தது. தலைமை தாங்கி நடத்திய தோழர் சீனிவாசனுக்கும் உதவி ஆய்வாளருக்கும் இடையே வாக்குவாதம் நடந்தது. தெருமுனைக் கூட்டத்திற்கு அனுமதி வாங்கத் தேவையில்லை என்பது விளக்கப்பட்டபின் பொம்மையை எரிக்காமல் பிரச்சாரம் செய்து கொள்ளுங்கள் என்று கூறி போலீசு கூடவே வந்து கண்காணித்தது. ஆறு இடங்களில் தெருமுனைக் கூட்டம் நடந்ததில் தோழர்கள் சீனிவாசன், புவன், காமராசு ஆகியோர் காங்கிரசு துரோகிகளையும், உ.வ.க-வின் அபாயத்தையும் விளக்கிப் பேசினர். பகுதி கலைக் குழுவினர் பாடல்களை பாடி மக்களை ஈர்த்தனர்.

நூல் விலை உயர்வைக் கண்டித்து திருப்பூர் பின்னலாடை உற்பத்தியாளர்கள் சங்கம் கடந்த 17.01.95 முதல் 19.01.95 முடிய மூன்று நாட்கள், தொழிலாளர்கள் ஆதரவுடன் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தினர். இப்போராட்டத்திற்கு கோவையில் இயங்கி வரும் தொழிலாளர் பிரச்சாரக்குழு தனது முழு ஆதரவை அளித்தது. மேலும் நூல் விலை உயர்வுக்குப் புதிய பொருளாதாரக் கொள்கையும் தேச விரோத டங்கல் ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டிருப்பதும்தான் காரணம் என விளக்கி, உ.வ.க. உருவ பொம்மையை 19.01.95 அன்று திருப்பூரில் எரிக்கும் போராட்டத்தை அறிவித்தனர்.

திருப்பூர் பழைய பேருந்து நிலையம் எதிரே தொ.பி.கு. அமைப்பாளர் சந்திரசேகரன் தலைமையில் தோழர்கள் உருவ பொம்மையை எரிக்கக் கூடினர். தயாராக நின்ற போலீசு, பொம்மையை எரியூட்டும் முன்பே நான்கு தோழர்களையும் கைது செய்தது. அன்று மாலை வரை தோழர்கள் காவல் நிலையத்தில் வைக்கப்பட்டு, பின் விடுதலை செய்யப்பட்டனர்.

## அதிகாரிகளைப் பணிய வைத்த மக்கள் போராட்டம்

சென்னை, சேத்துப்பட்டில் அண்ணாநகர் பகுதி மக்கள் 3 வருட காலமாக குடிநீர் குழாய்கள் கேட்டும் அதிகாரிகள் தட்டிக் கழித்தனர். பகுதியிலுள்ள ஓட்டுக்கட்சியைச் சேர்ந்த சமூக விரோத கும்பலால், லாரியில் கொண்டு வந்து தொட்டியில் ஊற்றும் தண்ணீரைக் காசு கொடுத்து வாங்கினால்தான் உண்டு. இதுவும் பற்றாக்குறை. பகுதியிலுள்ள புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியினர் இப்பிரச்சினைக்காக போராட முன்வந்து பிரச்சாரம் செய்து மனு கொடுக்க கையெழுத்து வாங்கினர். 12-1-95 அன்று சுமார் 60 பேரைத் திரட்டிக் கொண்டு குடிநீர் வழங்கல் அலுவலகத்திற்குச் சென்று முறையிட்டனர். யாரும் பொறுப்பான பதில் தராததால் அங்கேயே அமர்ந்து எதிர்ப்புத் தெரிவித்தனர். ஒன்றரை மணி நேரம் கழித்து அதிகாரியின் உதவியாளர் பொறுப்புக்கு உட்பட்டவர் வந்து விரட்டினார். அவருக்குப் போராட்ட முன்னணியாளர்கள் தக்க பதில் கொடுத்து கோரிக்கையைக் கூறினர். சம்பந்தப்பட்ட அதிகாரி விடுப்பில் இருப்பதாகவும் தற்காலிகப் பொறுப்பில் உள்ள அதிகாரியை இன்று மாலையே பகுதிக்கு அழைத்து வருவதாகவும் உறுதியளித்ததைத் தொடர்ந்து கலைந்து வந்தனர். அன்று மாலை அதிகாரிகள் பகுதிக்கு வந்தபோது 100-க்கும் மேற்பட்ட மக்கள் திரண்டு முறையிட்டனர். குறிப்பிட்ட காலத்திற்குள் குடிநீர் குறைகளைத் தீர்க்கவில்லையானால் சாலை மறியல் செய்வோம் என தோழர்கள் எச்சரித்தனர். அதிகார வர்க்கத்திற்கு எதிராக பு.மா.இ.மு.வைத் தவிர இப்பிரச்சினைக்காக எந்த ஓட்டுக் கட்சியும் உணர்வு பூர்வமாக மக்களை அணிதிரட்டி போராடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கிளை தொடக்க விழா

திருச்சி, அரியமங்கலம் பகுதியில் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியின் கிளை தொடக்க விழாவும் மாவோ நூற்றாண்டு நிறைவு விழாவும் 26.12.94 அன்று நடந்தது. தோழர் திருவள்ளுவர் தலைமை தாங்க, இக்கிளை அமைப்பாளர் தோழர் சத்யா, திருச்சிக் கிளைத் தோழர் ஜெகதீசன், ம.க.இ.க. தோழர் காளியப்பன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். சிறுவர்களின் கலை நிகழ்ச்சியும் ம.க.இ.க., திருச்சி கலைக்குழுவின் "அடிமைச் சாசனம்" நிகழ்ச்சியும் நடந்தன. சுமார் 400 பேர் குழுமியிருந்து ஆதரவு தந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

# காங்கிரசுக்கு கொள்ளி வைக்க கோஷ்டி சண்டை

## சட்ட விரோதமான முறையில் மட்டுமே காங்கிரசு இனி ஆட்சியில் நீடிக்க முடியும்

இந்தி பேசும் மாநிலங்களிலேயே செல்லாக் காசாகிவிட்ட காங்கிரசுக்கு கைகொடுத்து வந்தன தென் மாநிலங்கள் இவையாவும் அண்மையில் நடந்த இடைத் தேர்தலில் காலை வாரிவிட்டுள்ளன. தேர்தல் முடிவுகள் தெரிவதற்கு முன்பாகவே காங்கிரசுக்குள் குத்து வெட்டு, பதவிப் போட்டி, கோஷ்டிச் சண்டை வெடித்து கட்சியே கலகலத்துப் போய்க் கிடக்கிறது. கோடி கோடியாய் கொள்ளையடித்த காங்கிரசுப் பெருச்சாளிகளின் ஊழல்கள் அம்பலமாகி நாடே நாறுகிறது.

பதவி வெறியர்கள், கட்சி மாறிகள், அதிகார முறைகேடு - லஞ்ச ஊழல் பேர்வழிகள், சமூக விரோத - ஒழுக்கக் கேடான கிரிமினர் பேர்வழிகள், பிழைப்புவாதிகள் முதலானோர் நிறைந்துள்ள காங்கிரசுக் கூடாரத்தில் கோஷ்டிச் சண்டைகள் புதிதல்ல. ஆனால் கட்சியிலும் ஆட்சியிலும் ஆதிக்கம் வகிப்பவர்களும் சரி, அவர்களுக்குப் போட்டியானவர்களும் சரி, கடைந்தெடுத்த சுயநல - காரியவாத புதிய தலைமுறையினர். எனவே பதவி வேட்டைக்கான நாய்ச் சண்டைகள் நாகரீகப் போர்வையுடன் நடக்கவில்லை. பகிரங்கமாகவும் மூர்க்கமாகவும் நடக்கிறது.

அதேபோல அடி முதல் நுனி வரை புழுத்து நாறும் லஞ்ச ஊழலும் காங்கிரசில் புதிய விவகாரமல்ல. ஆனால் கோடி கோடியாய் லஞ்ச ஊழல்கள் செய்து அம்பலப்பட்ட பிறகும், ஆடாமல், அசையாமல் வெட்கமின்றி பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கும் கேடுகெட்ட புதிய பாரம்பரியத்தில் காங்கிரசு முன்னேறி வருகிறது.

வரலாறு காணாத வங்கி - பங்குச் சந்தை ஊழல், சர்க்கரை ஊழல்களில் சிக்கி காங்கிரசுப் பெருச்சாளிகள் அம்பலப்பட்ட போதும் - குறிப்பாக கல்பனாத் ராய், ராமேஷ்வர் தாக்கூர், சங்கரானந்த் ஆகிய மத்திய மந்திரிகள் மீது குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இருப்பதாக விசாரணை அறிக்கைகள் வெளிவந்த போதிலும், அவர்களுக்கும் ஊழலுக்கும் தொடர்பேயில்லை; அவர்கள் மீது நடவடிக்கையும் தேவையில்லை என்று சிறிதும் கூச்சநாச்சமின்றி பிரதமர் ராவ் ஊழல் பெருச்சாளிகளைக் காப்பாற்ற முற்பட்டார். இதே நேரத்தில் ஆந்திர, கர்நாடகத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி படுதோல்வியடைந்தது. ஊழல் பெருச்சாளிகளைக் காப்பாற்றிய பிரதமரின் தவறான போக்குதான் இத்தேர்தல் தோல்விக்குக் காரணம் என்று அதிருப்தி கோஷ்டித் தலைவரும் மத்திய அமைச்சருமான அர்ஜுன்சிங், பிரதமர் ராவ் மீது பகிரங்கமாக குற்றச்சாட்டுகளை முன் வைத்தார். பீதியடைந்த நரசிம்மராவ், ஊழலில் அம்பலப்பட்ட மூன்று அமைச்சர்களை பதவியிலிருந்து நீக்கி யோக்கியவனாக நாடக மாடினார். நாடாளுமன்றமும் ஒத்தி வைக்கப்பட்டது.

இவற்றால் பிரச்சினை சூடு தணிந்து ஆறிப் போய்விடும் என்று ராவ் கும்பல் எதிர்பார்த்தது. ஆனால் சர்க்கரை ஊழலில் சிக்கிப் பதவியிழந்த அமைச்சர் கல்பனாத்ராய், விசாரணை என்று வந்தால், எனக்கு மேலே உள்ளவர்களும் இந்த விவகாரத்தில் சிக்கியிருப்பது அம்பலமாகும் என்று ராவ் கும்பலை "ப்ளாக்மெயில்" செய்து மிரட்டி எச்சரித்தார். காங்கிரசுத் தலைவர் பதவியிலிருந்து நரசிம்மராவ் விலக வேண்டும் என்று கோரிவந்த அர்ஜுன்சிங், இந்த நிலைமையை சாதகமாக்கிக் கொண்டு கடந்த டிசம்பர் 24-ந் தேதியன்று தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்தார். கோடி கோடியாய் பெருகிவிட்ட ஊழல், புதிய பொருளாதாரக் கொள்கையின் பாதிப்பு, முடிவுக்கு வராத ராஜீவ் கொலை வழக்கு விசாரணை, இந்திரா - ராஜீவ் ஆதரவாளர்கள் கட்சியிலும் ஆட்சியிலும் புறக்கணிக்கப்படுவது, காங்கிரசின் தவறான கொள்கையால் சிறுபான்மையினரான முஸ்லீம்களின் ஆதரவை இழந்திருப்பது முதலான குற்றச்சாட்டுகளை முன் வைத்து காங்கிரசு தலைவர் பதவியிலிருந்து நரசிம்மராவ் விலக வேண்டும் என்றும் சோனியாவை தலைவராக நியமிக்க வேண்டும் என்றும் கலகக் கொடியைத் தூக்கினார்.

தமிழகத்தில் வாழப்பாடி ராமமூர்த்தி கோஷ்டியும், உ.பி.யில் என்.டி. திவாரி கோஷ்டியும் அர்ஜுன்சிங் கோஷ்டியுடன் சேர்ந்து கொண்டு ராவ் கும்பலுக்கு எதிராக கலகத்தைத் தீவிரமாக்கியது. இவர்களோடு சோனியாவும் இதர அதிருப்தி கோஷ்டிகளும் ராவ் கும்பலுக்கு எதிராக கூட்டணி கட்டிக் கொண்டு நெருக்கடி கொடுத்தன. ஜெயலலிதாவின் அழைப்பை ஏற்று உலகத் தமிழ் மாநாட்டுக்கு பிரதமர் ராவ் வரக்கூடாது; அவ்வாறு வந்தால் சத்திய மூர்த்தி பவனில் காங்கிரசுக் கொடியை கீழே இறக்குவேன் என்று அர்ஜுன் சிங்கின் ஆதரவாளரும் தமிழக காங்கிரசுத் தலைவருமான வாழப்பாடி ராமமூர்த்தி, எச்சரித்தார். உ.பி.யில் அர்

பரபரப்பான கோஷ்டிச் சண்டையால் பலகோடி ரூபாய் ஊழல் விவகாரம் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்ட மகிழ்ச்சியில் ராவ் - அர்ஜுன் சிங்.





படிப்பகம்

www.padippakam.com

# அர்ஜுன் சிங்கின் முகவிலாசம்

மத்தியப் பிரதேசத்தில் அன்றைய ரேவா சமஸ்தானத்தில் மிகப் பெரிய ஜமீன்தாராக இருந்த ராவ் சிவ் பகதூர் சிங்கின் இரண்டாவது மனைவியின் மகனாகப் பிறந்தவர் அர்ஜீன் சிங். அவரது தந்தை வெள்ளைக்காரர்களுடன் சேர்ந்து கொண்டு ரேவா சமஸ்தானத்தைக் கைப்பற்ற கீழ்த்தரமான முயற்சிகளில் இறங்கியவர். பின்னர் 1948-ல் ரேவாவுடன் பன்னா முதலான சில பகுதிகள் இணைந்து அன்றைய மத்தியப்பிரதேச மாநிலம் அமைக்கப்பட்ட போது அர்ஜுன் சிங்கின் அப்பாவும் அதில் அமைச்சரானார். அவர் அமைச்சராக இருந்த அந்தக் காலத்திலேயே ரூ.25,000 லஞ்சம் வாங்கியதற்காக 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்தவர். நாட்டுக்கோ, மக்களுக்கோ சிறிதளவும் பணி புரியாமல் லஞ்சம் வாங்கியதற்காக சிறை சென்ற பெருமைக்குரிய 'தியாகி'யின் மகன்தான் இந்த அர்ஜுன் சிங்.

காங்கிரசுக் கட்சியில் சேர்ந்து பாசிச இந்திரா ராஜீவ் கும்பலுக்கு விசுவாச சேவை செய்த அர்ஜுன்சிங் மத்தியப் பிரதேச முதல்வரானார். அப்போது அவரும் அவரது குடும்பமும் சேர்ந்து "சுராத் குழந்தைகள் நலச் சங்கம்" என்ற பெயரில் தனியார் லாட்டரிச் சீட்டு குலுக்கலை நடத்தியது. ஒருமுறை மட்டும் லாட்டரி குலுக்கல் நடத்த அரசு அனுமதி பெற்று விட்டு 12 முறை இந்தக் கொள்ளையை நடத்தியது. தமிழகத்தில் லாட்டரி மோகம் அதிகம் என்பதால் தமிழிலும் லாட்டரி சீட்டு அச்சிட்டு விற்பனை செய்து கொள்ளையடித்தனர். பரிசு விழுந்தவர்களுக்குக் கூட தொகையைத் தராமல் இக்கும்பல் சுருட்டிக் கொண்டது. இம்மோசடி அம்பலமான பிறகு தனது விசுவாசி என்பதால் பாசிச ராஜீவ் அர்ஜுன் சிங் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. இம்மோசடிக்கு எதிராக நீதிமன்றத் தீர்ப்பு வெளியான பிறகுதான் யோக்கியவானாக நடித்த பாசிச ராஜீவ், அர்ஜுன் சிங்கை முதல்வர் பதவியிலிருந்து நீக்கினார். இதுதவிர வீட்டுமனை ஊழல், பண்ணையுடன் கூடிய பளிங்குக் கல் பதித்த ஆடம்பர மாளிகை கட்டியிருப்பது முதலான லஞ்ச ஊழல்களில் மூழ்கி முத்துக் குளித்தவர் தான் அர்ஜுன் சிங்.

இந்த ஊழல் திலகம்தான் இப்போது ராவ் அரசின் ஊழல் கொள்ளையை எதிர்க்கும் திருவாளர் பரிசுத்தமாக வேஷங்கட்டி ஆடுகிறார். நாடறிய நடந்த போபர்ஸ் பீரங்கி எச்.டி.டபிள்யூ ஆகிய நீர்மூழ்கிக்கப்பல் பேர ஊழல்களைத் தொடர்ந்து காங்கிரசு கட்சியே பிளவுபட்ட போது. இந்த உத்தம சிகாமணி எங்கே போனார் என்று நரசிம்மராவ் கோஷ்டியினர் அர்ஜுன் சிங்கை வெளிப்படையாகவே கேலி செய்கின்றனர். பிரதமர் பதவியைக் குறிவைத்து இந்த நவீன அர்ச்சுனன் நடத்தும் வில் வித்தைகளைக் கண்டு காங்கிரசுப் பெருச்சாளிகளே கைகொட்டிச் சிரிக்கின்றனர்.

ஜுன்சிங்கின் ஆதரவாளரும் மாநில காங்கிரசுத் தலைவருமான என்.டி.திவாரி இதேபோல போர்க் கொடி தூக்கினார். மேல் சாதியினர் நடத்தும் உத்தர் கண்ட் தனிமாநிலக் கோரிக்கையை ஆதரிக்கும் அவர், உ.பி.யில் முலயம்சிங் அரசுக்கு காங்கிரசு ஆதரவு தருவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று சத்தியாகிரகம், ஆர்ப்பாட்டங்களில் இறங்கினார். அவரோடு சேர்ந்து கொண்டு ராவ் கும்பலால் ஓரங்கட்டப்பட்ட முன்னாள் மத்திய அமைச்சர்களான மோஷினா கித்வாய், ஷீலா தீட்சிதர், நட்வர் சிங், பொட்டேதார், கே.என்.சிங் முதலானோர் ராவ் கும்பலை எதிர்த்து கலகம் செய்கின்றனர்.

ராஜீவ் கொலை வழக்கு விசாரணையை துரிதப்படுத்த வேண்டும் என்று அர்ஜுன் சிங் கூப்பாடு போடுகிறார். சோனியா தலைவராக உள்ள நேரு குடும்பத்தின் சொத்துக்களை நிர்வகிக்கும் ஜவஹர் பவன் அறக்கட்டளை உறுப்பினராக அர்ஜுன் சிங்கை அண்மையில் நியமித்து மறைமுகமாக தனது ஆதரவைக் காட்டியுள்ளார், சோனியா.

அதிருப்தி கோஷ்டிகளின் கலகத்தைக் கண்டு பீதியடைந்த ராவ், பேரங்கள் - பேச்சுவார்த்தைகள் மூலம் சரிகட்ட முயன்றார். மத்திய அமைச்சரவையை மாற்றியமைத்து பதவிகள் தருவதாக ஆசைகாட்டிப் பார்த்தார். ஆனால் அதிருப்தி கோஷ்டிகள் இதற்கு உடன்பட மறுத்துவிட்டன. எனவே, அதிருப்தி கோஷ்டிகளுக்குப் பெருகிவரும் ஆதரவைக் குறைக்க பாசிச இந்திரா - ராஜீவ் பாணியில் சர்வாதிகாரமாக அதிரடி நடவடிக்கைகளை எடுத்தார். தமிழகத்தில் வாழப்பாடி ராமமூர்த்தியின் பதவி பறிக்கப்பட்டு, குமரி அனந்தன் புதிய தலைவராக நியமிக்கப்பட்டார். உ.பி.யில் பார்பன - மேல்சாதியினரிரன் ஆதரவு பெற்ற என்.டி.. திவாரியை நீக்கிவிட்டு, பார்ப்பனரும், பிரதமரின் அரசியல் ஆலோசகருமாக ஜிதேந்திர பிரசாத் மாநில காங்கிரசுத் தலைவராக நியமிக்கப்பட்டார். இந் நடவடிக்கைகள் மூலம் அதிருப்தி கோஷ்டிகளின் சுருதி குறைந்து விடும் என்று ராவ் கணக்கு போட்டார்.

ஆனால் ராவ் எதிர்ப்பு கோஷ்டிகளோ இந்நடவடிக்கைகளால் ஆத்திரமடைந்து மேலும் மூர்க்கமாகப் பாய்கின்றன. தமிழகத்தில் வாழப்பாடி கோஷ்டி தனி அலுவலகம் அமைத்துக் கொண்டு, அர்ஜுன்சிங், திவாரியை அழைத்து விழாக்கள் நடத்தி தனிக்கட்சி போலவே செயல்படுகிறது. இதே போல உ.பி.யில் திவாரி கோஷ்டி, புதிய தலைவரின் கட்டுப்பாடுகளை மீறிச் செயல்படுகிறது. நாடெங்கும் திக் விஜயம் செய்யும் அர்ஜுன்சிங் நியாயம் கேட்கும் கூட்டங்களை நடத்தி ஆதரவு திரட்டி வருகிறார்.

அர்ஜுன்சிங் விவகாரத்தைத் தொடர்ந்து எல்லா மாநிலங்களிலும் காங்கிரசுக் கட்சிக்குள் கோஷ்டிச் சண்டைகள் தீவிரமாகிவிட்டன. கேரளத்தில் முதல்வர் கருணாகரனுக்கு. எதிராக உம்மன் சாண்டி - அந்தோணி கோஷ்டிகள்



கல்பனாத் ராய்



என்.டி. திவாரி



படிப்பகம்

www.padippakam.com

# யாரை ஆதரிப்பது? பாசு – சுர்ஜித் லடாய்!

நரகலில் நல்லரிசி தேடுவதென்பது போலிக் கம்யூனிஸ்டுகளின் பாரம்பரியக் கொள்கை. தற்போது காங்கிரசு சட்சியில் நடக்கும் கோஷ்டிச் சண்டையில் அர்ஜுன்சிங் கோஷ்டியை ஆதரிப்பதென 'மார்க்சிஸ்டு'கள் தீர்மானித்துள்ளனர். காங்கிரசுக்காரர்கள் அர்ஜுன்சிங் எழுப்பியுள்ள பிரச்சினைகளைப் பரிசீலித்து நமது குறைகளைத் திருத்திக் கொண்டால் தான், காங்கிரசுக் கட்சி பிழைக்கும் என்கிறார் 'மார்க்சிஸ்டு' பொதுச் செயலாளர் சுர்ஜித். அர்ஜுன் சிங் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது. அவ்வாறு செய்தால் காங்கிரசு பிளவுபட்டுப் போய்விடும் என்று 'மார்க்சிஸ்ட்' கட்சியின் அதிகார பூர்வ ஆங்கில ஏடான ''பீப்பிள்ஸ் டெமாகிரசி''யில் முதல் பக்க கட்டுரையை அவர் எழுதியுள்ளார். ''அர்ஜுன் சிங்குக்கு காங்கிரசுக் கட்சியில் பரவலான செல்வாக்கு உள்ளது. அவர் மீது நடவடிக்கை எடுத்தால் நெருக்கடி தீவிரமாகி, கட்சி பிளவுபட்டுவிடும் என்று நரசிம்மராவை எச்சரிக்கிறார், 'மார்க்சிஸ்ட்' கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினராக சீதாராம் எச்சூரி.

தி.மு.க.விலிருந்து பிரிந்த வை.கோபால்சாமியின் ம.தி.மு.க.வை 'மார்க்சிஸ்டு'கள் ஆதரித்து கூட்டணி சேர்ந்துள்ளதைப் போல, காங்கிரசிலும் அர்ஜுன்சிங் தலைமையில் ஒரு புதிய கோஷ்டி பிளவுபட்டு தனிக் கட்சியை நிறுவினால் அதனுடன் கூட்டுச் சேர்ந்து ஓட்டுப் பொறுக்கலாம் என்று கணக்கு போடுகின்றனர். ஊழல் எதிர்ப்பு, வகுப்புவாத எதிர்ப்பு, அந்நிய மூலதன ஆதிக்கத்துக்கு எதிர்ப்புத் தன்மை கொண்ட முற்போக்குவாதியாக அர்ஜுன் சிங்கைக் காட்டி கூட்டணி சேரலாம் என்று கனவு காண்கின்றனர்.



ஆனால், அரசியல் தலைமைக்குழு உறுப்பினரும், மே.வங்க 'மார்க்சிஸ்டு' முதல்வருமான ஜோதிபாசு கோஷ்டி, காங்கிரசுக்கு நெருக்கடி வரும்போதெல்லாம் முட்டுக் கொடுத்து ஆதரிக்கும் தமது பாரம்பரிய கொள்கைப்படி நரசிம்மராவ் கோஷ்டியை ஆதரிக்கிறது. இரகசிய உலகப் பேர்வழியும் நரசிம்மராவின் கூட்டாளியுமான சந்திராசாமி, ஜோதிபாசுவின் முதலாளித்துவ மகன் சந்தன் பாசுவுடன் பேரங்கள் நடத்திய பிறகு, ஜோதிபாசு கோஷ்டி நரசிம்மராவை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளது. கல்கத்தாவில் அண்மையில் நடைபெற்ற இந்திய தொழிற்சாலை சம்மேளனத்தின் நூற்றாண்டு விழாக் கூட்டத்தில் பேசிய ஜோதிபாசு, தமக்கும் ராவ் அரசின் கொள்கைகளுக்கும் வேறுபாடு உள்ளதாகக் கூறினாரே தவிர, ராவ் அரசின் கொள்கைகளை வெளிப்படையாக எதிர்க்கவில்லை. ஜோதிபாசு கோஷ்டியின் முடிவைக் கண்டு சுர்ஜித் கோஷ்டி எரிச்சலடைந்து, தமது முடிவுக்கு கட்சியில் வேகமாக ஆதரவு திரட்டி வருகிறது. இன்றைய கட்டத்தில் நரசிம்மராவை எதிர்த்தால், மாநிலத்தின் தொழில் வளர்ச்சி பாதிக்கும் என்று பாசு கோஷ்டி, சுர்ஜித் கோஷ்டியை எதிர்க்கிறது.

மாஸ்கோவில் மழை பெய்தால் மதுரையில் குடை பிடிப்பார்கள் என்று இப்போலிக் கம்யூனிஸ்டுகளை அன்று திராவிட இயக்கத்தினர் கேலி செய்வார்கள். இன்று காங்கிரசில் கோஷ்டி தகராறு என்றால், அது 'மார்க்சிஸ்ட்' கட்சியிலும் எதிரொலிக்கிறது. நல்ல முன்னேற்றம்தான்!

---

வரிந்து கட்டிக் கொண்டு நிற்கின்றன. ம.பி.யில் அர்ஜுன்சிங், சுக்லா, சிந்தியா கோஷ்டிகள் முட்டி மோதுகின்றன. கர்நாடகத்தில் பி.லட்சுமணய்யா கோஷ்டி, வாழப்பாடி பாணியில் தனி அலுவலகம் வைத்துக் கொண்டு செயல்படுகிறது. பீகாரில் ஜெகன்னாத் மிஸ்ரா, எல்.பி. சாகி கோஷ்டிகள் தேர்தல் டிக்கெட் கேட்டு அடித்துக் கொள்கின்றன. மகாராஷ்டிராவில் சரத்பவார், நாயக், சவான் கோஷ்டிகளுக்கிடையிலான நாய் சண்டை பகிரங்க தெருச் சண்டையாக தீவிரமாகிவிட்டது.

லட்சுமணன் சீதைக்கு கோடு போட்டது போல, எல்லாவற்றுக்கும் ஒரு எல்லைக்கோடு உண்டு; ஒழுங்கீனத்தை என்னால் சகித்துக் கொள்ள முடியாது; நடவடிக்கை எடுப்பேன் என்று நரசிம்ம ராவ் மிரட்டி எச்சரித்த போதிலும் யாரும் அதைப் பொருட்படுத்தவேயில்லை. சோவியத் ஒன்றியத்தை கோர்ப்பச் சேவ் சிதைத்ததைப் போல, நாட்டையும் காங்கிரசையும் இந்திய கோர்பச்சேவ் சிதைக்கிறார் என்று கூறி நரசிம்மராவுக்கு பகிரங்கமாக சவால் விடுக்கின்றன.

பாசிச நரசிம்மராவ் கும்பல் இன்னும் எவ்வளவு காலம் ஆட்சியில் நீடித்திருக்க முடியும்? அதன் தலைமையிலான காங்கிரசு இன்னும் எவ்வளவு காலம் ஒரு கட்சியாக ஒற்றுமையுடன் நீடிக்க முடியும்? இந்தக் கேள்விக்குறிகள் நாளுக்கு நாள் பெரிதாகிக் கொண்டே போகின்றன. வானொலி, தொலைக்காட்சி மற்றும்

**காங்கிரசில் புதிய தலைமுறையினரின் பதவி வேட்டைக்கான நாய்ச் சண்டைகள் நாகரீகப் போர்வையுடன்கூட நடக்கவில்லை. அருவருப்பாகவும் பகிரங்கமாகவும் மூர்க்கமாகவும் நடக்கின்றன.**

கூலிப் பிரச்சார பத்திரிகைகள் மூலம் என்னதான் மாயத் தோற்றத்தையும் பொய்யான நம்பிக்கைகளையும் ஏற்படுத்தினாலும் ஆட்சி, கட்சி ஆகிய இரண்டினது கடைசி நாட்கள் எண்ணப்படுகின்றன என்பதே யதார்த்த நிலைமை. நாட்டைத் தவணை முறையில் மறு அடகு வைத்தும், ஊழலில் மூழ்கியும் கிடக்கும் ராவ் கும்பல் தார்மீக ரீதியாக பதவியில் நீடித்திருப்பதற்கான யோக்கியதையை எப்போதோ இழந்துவிட்டது. ஆனால் சட்டபூர்வமாக ஆட்சியும் அமைப்பு ரீதியாக கட்சியும் இனிமேலும் நீடித்திருக்க முடியாது என்கிற நிலைமை நெருங்கிவிட்டது. சட்டவிரோதமான முறையில் அடாவடித்தனமாக மட்டுமே அது ஆட்சியில் நீடிக்க முடியும் என்கிற நிலைமை உருவாகி விட்டது.

வரும் மார்ச் மாதத்தில் 6 மாநில சட்டமன்றத் தேர்தல்கள் வருகின்றன. அடுத்தடுத்த தேர்தல் தோல்விகளால் பாசிச ராவ் கும்பலின் முகத்திலே சவக்களை பரவி வருகின்றது. பாசிஸ்டுகள் அமைதியான முறையிலே தமது அதிகாரத்தை இழக்கச் சம்மதிக்க மாட்டார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



அர்ஜுன் சிங்குடன் சேர்ந்து கலகக்கொடி தூக்கியுள்ள வாழப்பாடி ராமமூர்த்தி; வெட்கங்கெட்டதுகளின் வெற்றுக் கூச்சல்.

பதவிக்கு நெருக்கடி வரும்போது, நாட்டின் மீதும் மக்களின் மீதும் ஏன், தமது கட்சியின் அதிருப்தி கோஷ்டிகள் மீதும் அடக்குமுறை ஏவவும் தயங்கமாட்டார்கள்.

அண்மையில் உலக வர்த்தக கழகத்தின் உறுப்பினராக இந்தியாவைச் சேர்ப்பதற்காக, காப்புரிமை மற்றும் சுங்கத் தீர்வையில் மாற்றங்களைக் கொண்டுவரும் இரு அவசரச் சட்டங்களை ராவ் அரசு பிறப்பித்துள்ளது. நாடாளுமன்றத்தில் முன் அனுமதியோ, விவாதமோ இல்லாமல் அகந்தையோடு சர்வாதிகாரமாக இதனைச் செய்துள்ளது. இந்நிலையில், பாசிச இந்திரா - ராஜீவை விட கூடுதல் அதிகாரங்களைக் குவித்துக் கொண்டுள்ள ராவ் கும்பல் அதிருப்தி கோஷ்டிகளிடம் ஜனநாயக முறையில் ஒருபோதும் தீர்வுகாண முற்படாது. ஜனநாயக ரீதியான கொள்கை முடிவோ, ஜனநாயகத் தேர்தல்களோ காங்கிரசு கலாச்சாரத்தில் என்றைக்குமே கிடையாது. பரம்பரை வாரிசுரிமையும் தனிநபர் ஆதிக்கமும்தான் அதன் பாரம்பரிய மரபுகளாக உள்ளன.

**பாசிச இந்திரா - ராஜீவைவிட கூடுதல் அதிகாரங்களைக் குவித்துக் கொண்டுள்ள ராவ் கும்பல் அதிருப்தி கோஷ்டிகளிடம் ஜனநாயக முறையில் ஒருபோதும் தீர்வுகாண முற்படாது.**

இந்நிலையில் வலுவான மக்கள் இயக்கம் எதையுமே கட்டி எழுப்பாமல், நெருக்கடிகளினால் ராவ் கும்பல் பதவி விலகி விடும் என்ற மாயத் தோற்றத்தை அதிருப்தி கோஷ்டிகளும் எதிர்க்கட்சிகளும் உருவாக்குகின்றன. ஆனால் அதிருப்தி கோஷ்டியினர் அனைவருமே கடைந்தெடுத்த ஊழல் பெருச்சாளிகள், பதவிவெறியர்கள். அதேபோல, எதிர்க்கட்சிகளிலும் சந்திரசேகர், ராமாராவ், தேவிலால், கருணாநிதி, ஜெயலலிதா போன்ற ஊழல், பாசிசப் பேர்வழிகள் தான் உள்ளனர். பாரதீய ஜனதா, சிவசேனா முதலான இந்துவெறி பாசிஸ்டுகளும், போலிக் கம்யூனிஸ்டு துரோகிகளும், ஐந்தாம் படையினரும், பாசிசத்தின் ரகசிய கூட்டாளிகளும் தான் உள்ளனர்.

இவர்கள் அனைவரையும் நிராகரித்துவிட்டு, கம்யூனிசப் புரட்சியாளர்களின் தலைமையில் உழைக்கும் மக்கள் அணிதிரள வேண்டும். நாட்டை ஏகாதிபத்தியங்களிடம் அடகு வைத்து விட்ட பாசிசக் கூடாரமான காங்கிரசை, நூறாண்டுகளாக மக்களைச் சுரண்டிக் கொழுத்து நிற்கும் பட்டுப் போன நச்சு மரத்தை வெட்டியெறிய கிளர்ந்தெழ வேண்டும்.

● மனோகரன்


எமது இரண்டாவது வெளியீடு

மார்க்சிய அடிப்படைக் கோட்பாடுகளின் மையக்கருத்தைத் தெள்ளத்தெளிவாகத் தொகுத்துரைக்கும்

மாரீஸ்கார்ன்ஃபோர்த்-இன்

மார்க்சிய மூல நூல்களுக்கு வாசகர் வழிகாட்டி
விலை ரூ.35.00



நூலினை அஞ்சலில் வேண்டுவோர், நூலின் விலையுடன் ரூ.8-ஐச் சேர்த்து எமது முகவரிக்கு பண விடைத்தாள் செய்து பெற்றுக்கொள்ளவும்

கீழைக்காற்று
10, ஔலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை-2.


● ● ●

## அறிவிப்பு

அன்பார்ந்த வாசகர்களே!

கடந்த மாதத்தில் சில வாரங்களுள் பத்திரிகை தாளின் விலை 70 சதவிகிதத்திற்கு மேல் கூடிவிட்டது. நமது சிறு பத்திரிகைக்கு ஏற்கனவே இருந்த நிதிநெருக்கடியுடன் இச்சுமையும் கூடியுள்ளதால் தவிர்க்கவியலாமல் பக்கத்தை மட்டும் குறைத்துள்ளோம். கேடுகெட்ட காங். கும்பலின் பொருளாதாரக் கொள்கையால் பத்திரிகை துறை மற்றும் படித்தவர்கள் மீது தொடுக்கப்பட்டிருக்கும் தாக்குதல் இது. வாசகர்கள் தொடர்ந்து ஆதரவு தருமாறு கோருகிறோம். ஆசிரியர் குழு.



படிப்பகம்

www.padippakam.com

# நீலிகளின் ஆட்சியில் தலித் மக்கள் தவிப்பு

**உ**த்திரப் பிரதேசம் - பதுவான் கிராம தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருப்பு பகுதி அமைதியில் உறைந்து கிடந்தது. அருகில் உள்ள நாக்லா பெர்சி கிராமத்து செங்கல் சூளையில் இரண்டு மாத காலமாகத் தங்கி வேலை செய்துவிட்டு சொந்த வீடு திரும்பிய 24 குடும்பங்களும் அன்றைய (நவ. 28) இரவு தூக்கத்தில் நுழைந்திருந்தன. திடீரென ஆயுதந்தரித்த 20-க்கும் மேற்பட்டோர் கொண்ட கும்பல் குடியிருப்பில் புகுந்து தாக்கவே ஒன்றும் புரியாத நிலையில் அப்பாவி மக்கள் அலறியடித்துக் கொண்டு ஓடத்தான் முடிந்தது. வயது வரம்பில்லாமல் கைகளில் கிடைத்தவரையெல்லாம் அக்கும்பல் கண்மூடித்தனமாக தாக்கியது; குடிசைக்குள் புகுந்து பொருட்களைச் சூறையாடியது; இளம்பெண்களை அவர்களுடைய கணவர், பெற்றோர், பிள்ளைகள் முன்பே பாலியல் பலாத்காரப்படுத்தி பேயாட்டம் போட்டது. அந்த 24 குடும்பத்து இளம் பெண்கள் 17 பேர் 'கற்பழிக்கப்'பட்டார்கள்.

செங்கல் சூளையின் ஒப்பந்தக்காரர் மற்றும் சில ஊர்க்காரர்களும் சேர்ந்து போய் அருகே உள்ள தாதோன் போலீசு நிலையத்தில் புகார் கொடுத்தும், போலீசு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. இரண்டு நாள் கழித்துதான் முதல் தகவல் அறிக்கையை, அதுவும் எந்த விவரமும் இல்லாமல் பதிவு செய்தது. டிசம்பர் 4-ந் தேதி பத்திரிகைகளில் செய்தி வந்தபின் அரசியல்வாதிகள் படையெடுத்து வந்து ஆறுதல் கூறினார்கள். நான்கு போலீசு அதிகாரிகள் தற்காலிக நீக்கம் செய்யப்பட்டனர். இத்துடன் இப்பிரச்சினை கிடப்பில் போடப்பட்டது. ஒரு செங்கல் சூளையில் வேலை செய்ய மறுத்து, அதிகக் கூலி கொடுக்கும் வேறு சூளைக்கு வேலைக்கு செல்லும் தொழிலாளர்களை முதலாளிகள் ஆள் வைத்து இப்படித் தாக்குவது வழக்கம். அல்லது செங்கல் சூளை வைப்பதற்காக அக்குடியிருப்பு இடத்தைக் கைப்பற்றுவதற்காக தாக்கி தாழ்த்தப்பட்ட மக்களைத் துரத்துவது வழக்கம். இவற்றுள் ஏதோ ஒன்று காரணம் என்ற சந்தேகம் மட்டுமே இப்பிரச்சினையில் உயிருடன் இருக்கிறது.

●●●

டிசம்பர் 22 மீரட் - அடர்னா கிராமத்தில் தாழ்த்தப்பட்டவரான ஓம்வீர் சிங்கின் வீடு தட்டப்பட்டதும் கதவை திறந்தார். ஆயுதங்களுடன் நின்ற நான்கு பேர் ஓம்வீர் சிங்கைத் தாக்கிவிட்டு அவரது 22 வயதுடைய மனைவியைத் தூக்கிச் சென்றனர். இரண்டு நாட்களாக பணயக் கைதியாக வைத்துத் தாக்கி படுகாயப் படுத்தியதோடு தொடர்ந்து பலமுறை 'கற்பழித்து'ள்ளனர். அப்பெண்ணால் படுக்கையில் ஓய்வெடுக்கக்கூட முடியவில்லை; உள், வெளி காயங்களுடன் உயிருக்குப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். இந்நிலையில் போலீசுவேறு, வழக்கு பதிவு செய்ய மறுத்தது. செய்தி கேட்டு பகுதி மக்கள் கிளர்ந்தெழுந்து போலீசு நிலையத்தை முற்றுகையிட்டு நிர்ப்பந்தித்தனர். பின்னரே போலீசு பணிந்தது. பெண்ணிற்கு மருத்துவ சிகிச்சைக்கும் ஏற்பாடு செய்து கொடுத்தது. டிசம்பர் மாதத்தில் மட்டும் நடந்த 4-வது சம்பவம் இது. பாலாவாடா, சோபிபூர் மற்றும் சௌமாலி ஆகிய கிராமங்களில் நடந்த சம்பவங்களிலும் பாதிக்கப்பட்ட பெண்கள் தாழ்த்தப்பட்டவர்களே.

வட மாநிலங்களிலேயே உ.பி., பீகார் பகுதியில் தாழ்த்தப்பட்டவர்கள் மீதான தாக்குதல் என்பது அளவிடற்கரியதாகவும் மிகவும் கொடூரமானதாகவும் உள்ளது. பார்ப்பனரல்லாத மேல்சாதிக்காரர்கள்தான் பெரும்பாலும் தாக்குதல் தொடுப்பவர்கள். தாழ்த்தப்பட்டவர்கள் சாதியக் கட்டுப்பாட்டை மீறும்போதோ, சாதியக் கொடுமைகளை தட்டிக் கேட்கும் போதோ மேல்சாதி வெறியர்கள் மூர்க்கத்தோடு பாய்கிறார்கள். கலப்பு - காதல் திருமணங்களில் தாழ்த்தப்பட்டவர் வெட்டிக் கொல்லப்படுவது, அவமானப் படுத்தப்படுவது அதிகம் நிகழ்கிறது. இரண்டாண்டுகளுக்கு முன்பு உ.பி.யில் மெஹ்ரானா கிராமத்தில் கலப்பு மணம் செய்த தம்பதிகளை தூக்கிலிட்டும் உயிரோடு எரித்தும் கொன்ற கொடுமை நிகழ்ந்தது. கடந்த ஆண்டு மத்தியில் பீகாரில் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த மகாவீர் ரவிதாசும் குர்மி சாதியைச் சேர்ந்த மாலதியும் கடிமணம் புரிந்ததற்காக ஊர் பஞ்சாயத்தில் நிறுத்தி தாக்கி சித்திரவதை செய்யப்பட்டனர். மகாவீரை கல்லால் அடித்துக் கொன்றனர். மாலதியை நிர்வாணப்படுத்தி நெருப்பால் சுட்டுத் தாக்கினர்.

கலப்புமணம் செய்து கொண்டதற்காக தாக்கப்படுவது போல தாழ்த்தப்பட்டவர்களின் குடியிருப்பு பகுதிகளை, நிலங்களை ஆக்கிரமிக்கும் பொருட்டு நிகழ்கிற நியாயமற்ற தாக்குதல்களும் பாலியல் பலாத்காரங்களும் ஏராளம். சின்ன சின்ன காரணங்களுக்குக்கூட, ஏன் காரணமே இல்லாமல்கூட இவர்கள் பாதிக்கப்படுவதுதான் இன்னும் கொடுமை. கடந்த ஆண்டு மத்தியில் உ.பி. காரவீனா கிராமத்து தாழ்த்தப்பட்ட தம்பதிகளின் குடியிருப்பை யாதவ் சாதிவெறியன் ஒருவன் ஆக்கிரமித்துக் கொண்டதோடு மட்டுமல்லாமல் அவர்களைத் தாக்கியும் பெண்களை நிர்வாணப் படுத்தி ஊர்வலமாக விட்டு அவமானப்படுத்திய கொடுமையும் நடந்தது. மூன்றாண்டுகளுக்கு முன்பு மகாராட்டிராவில் சவாணே என்கிற தாழ்த்தப்பட்டவர் மழைக்காக ஒரு மேல்சாதியினரின் கோயிலில் ஒதுங்கிவிட்டதற்காக கல்லால் அடித்தே கொல்லப்பட்டார். அண்மையில் பீகாரில் மாங்காய் 'திருடி'யதற்காக ஒரு தாழ்த்தப்பட்டவர் மேல்சாதி வெறியர்களால் சித்திரவதை செய்து கொல்லப்பட்டார். கடந்த மே மாதம் உ.பி. - மீரட்டில் அம்பேத்கர் சிலை நிறுவிய பிரச்சினையில் போலீசால் 25 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதும், தாழ்த்தப்பட்டவர்களை நாயைப் போலக் கட்டித் தெருவில் இழுத்துச் சென்று அவமானப் படுத்தியதும் நிகழ்ந்தன.

தாழ்த்தப்பட்டவர் என்றால் பாதிக்கப்படுவதில் அதிகாரியும் அவர்கள் மீது பாய்ந்து குதறுவதில் எம்.எல்.ஏ, எம்.பி.யும் விதிவிலக்கல்ல என்பதற்கு உதாரணங்கள் இவை:

● பீகார் - கோபால்கஞ்ச் மாவட்ட நீதிபதியும், ஐ.ஏ.எஸ். அதிகாரியுமான ஜி. கிருஷ்ணய்யா ஒரு தாழ்த்தப்பட்டவர். கலப்பு மணம் செய்து கொண்டவர். நவம்பர் 5-ந் தேதி காரிலிருந்து இழுத்து தாக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார். பீகார் மக்கள் கட்சியின் உள்ளூர் தலைவனும் மாஃபியா தலைவனும் மேல்சாதி வெறியனுமான சோட்டன் சுக்லா கொல்லப்பட்டதற்குப் பழி எனக் கூறி (கொலையாளிகள் ஜனதா தளத்தினர்; கிருஷ்ணய்யா, லல்லு பிரசாத் யாதவ்வின் நண்பர் என்று கூறி) கொன்றனர். குர்மி, ராஜ்புத் போன்ற மேல்சாதியினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும், அண்மை இடைத் தேர்தலில் வெற்றி பெற்ற எம்.பி. லவ்லி - ஆனந்த்மோகன் என்பவரின் பீகார் மக்கள் கட்சிக்கும், யாதவ் போன்ற 'பிற்பட்ட' சாதியினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனதா தளத்திற்கும் இடையே நடந்த அரசியல் மோதலில் தொடர்பில்லாத கிருஷ்ணய்யா பழி வாங்கப்பட்டார்.

உ.பி., பீகாரில் யாதவ் சாதியினரின் ஆட்சி நடைபெறுகிறது என்றால் மிகையில்லை. அரசு உயர் பதவிகளில் பிறசாதியினரை ஓரங்கட்டி யாதவ் சாதியினரே திணிக்கப்படுவதால் 'பிற்பட்ட' சாதியினரில் உள்ள வேறு பிரிவினர்கள் தனி மாநா





படிப்பகம்

www.padippakam.com

டுகள் நடத்திச் சலுகை கோரி போராடி வருகிறார்கள். உ.பி. கூட்டணி ஆட்சியி விருக்கும் பகுஜன் சமான் கட்சியும் இத னால் ஊடல் கொண்டுள்ளது. ஆனால், மேல்சாதியினர் தங்களுக்குள்ளே மோதிக் கொள்ளும் போதுகூட தாழ்த்தப் பட்டவர்களைத் தாக்குவதற்கு ஒன்று சேர் கிறார்கள்; கட்சி வேறுபாடுகளை மறந்து விடுகின்றனர். கிருஷ்ணய்யா விவகாரத் தில் கூட ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் வற்புறுத் தலுக்குப் பின்தான் லல்லு பிரசாத் யாதவ் கண்துடைப்பு நடவடிக்கைகள் எடுத்து விட்டு அமைதியாகிப் போனார் என்றால் சாதாரண தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான தாக்குதலுக்குப் பதிலாக என்ன செய்துவி டப் போகிறார்கள்? மேலும் மேல்சாதிக் காரர்கள் 'பிற்பட்ட' சாதியினருடன் மோதுவது என்பது பலப்பரீட்சை அல் லது தற்கொலைக்குச் சமமாக உள்ளது. ஏனெனில் 'பிற்பட்ட' சாதியினரிடம் மாஃபியா கிரிமினல் கும்பல்கள், ஆயு தங்கள், தனிக் கொலைப் படைகள், பொருளாதாரம் அனைத்தும் உள்ளன. ஆனால் தாழ்த்தப்பட்டோரோ கூலி விவ சாயிகளாகவோ, தொழிலாளர்களா கவோ மிகவும் பின்தங்கிய வாழ்க்கைத் தரத்தில் கேட்பாரற்றவர்களாக இருக்கி றார்கள்.

● பீகார் ஜனதா தளக் கட்சி எம்.எல்.ஏ. யோகேந்திர நரைன் சர்தாரும் அவனது நண்பர்களும் வயிறுமுட்ட குடித்துவிட்டு நவம்பர் 17-ந் தேதி ஹேமந்தபூர் கிராமத்திற்குள் புகுந்தனர். ஒரு தாழ்த்தப்பட்டோர் குடிசைக்குள் நுழைந்து பெற்றோர்களைத் தாக்கிவிட்டு இளம்பெண்ணைக் கடத்திக் கொண்டு போய் கும்பலாக, பலமுறை பலாத்காரம் செய்தன, அம்மிருகங்கள். தப்பிக்கப் போராடிய அப்பெண், எம்.எல்.ஏ.யின் ஆண்குறியைக் கடித்துத் துண்டித்த பின் தான் அம்மிருகங்கள் அலறிக் கொண்டு ஓடியுள்ளன. சம்பவம் நடந்த இடத்தில் போலீசு சில ஆதாரங்களைக் கைப்பற்றி யும் அப்பெண், அக்காமுகர்களை அடை யாளங்காட்டியும் பயனில்லை. லல்லு சில அதிரடி நடவடிக்கைகளை மட்டுமே எடுத்தாரே ஒழிய குற்றவாளிகள் தாண் டிக்கப்படவில்லை; தப்பித்துக் கொண்ட னர்.



வட மாநிலங்களிலேயே உ.பி., பீகார் பகுதியில் தாழ்த்தப்பட்டவர்கள் மீதான தாக்குதல் என்பது அளவிடற்கு அரியதாகவும் மிகவும் கொடூரமானதாகவும் மாறிவிட்டது.





(மேலே) பலாத்காரப் படுத் தப்பட்ட உ.பி. - பதுவான் கிராமப் பெண்கள்; (வலது) லல்லுவுடன் காமுகன் யோகேந்திர நரைன் சர்தார்; (இடது) படுகொலை செய் யப்பட்ட கிருஷ்ணய்யா.

''பிற்படுத்தப்பட்டவர்கள் தாழ்த்தப் பட்டவரின் ஒற்றுமையை சாதித்துவிட் டோம்'' என்று கூச்சலிடும் ஜனதா தளம், சமாஜ்வாடி போன்ற கட்சிகளின் பித்த லாட்டம் தோலுரிந்து தொங்குகிறது. இவர்களிடம் ஆட்சி கையிலிருந்தும் தாழ்த்தப்பட்டவர்கள் மீதான அநீதிக ளைத் தடுக்க முடியவில்லை; அநீதிக்கா ரர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் முடி யவில்லை. ஓட்டு, பதவி ஆதாயம் கருதி கையைப் பிசைந்து கொண்டு வேடிக் கைத்தான் பார்க்க முடிகிறது. இதில் சமாஜ்வாடி கட்சியுடன் கூட்டணியாட்சி அமைத்திருக்கும் பகுஜன் சமாஜ் கட்சி (கன்சிராம்)யும் விதிவிலக்கல்ல. இவர்க ளால் கண்டனக் குரலை சற்று உணர்ச்சி பூர்வமாக ஓங்கி ஒலிக்கவோ, சில கண்து டைப்பு நடவடிக்கைகளை விரைவாக நடத்திக் கொடுக்கவோ முடிகிறது. அவ் வளவுதான்.

ஓட்டுக்கட்சிகளின், பிழைப்புவாதி களின் குறி பதவி நாற்காலிதான். இதற் காக பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த பிழைப்புவாதிகள் கைகோர்த்துக் கொண்டு ''ஒற்றுமை'' கூச்சல் போடுகி றார்களே ஒழிய கீழ்மட்ட அளவில் - நகரம், கிராம அளவில் - சாதிய முரண் பாடு கூர்மையாகவே உள்ளது. மோதல் கள், தாக்குதல்கள் அதிகமாகவே நடக் கின்றன. அதுவும் பீகாரில் மேல்சாதி நில பிரபுக்கள் தனி-கொலைவெறி ஆயுதப் படைகளைக் கட்டியமைத்து வேட்டை யாடுகிறார்கள்.

இதனால் உ.பி., பீகாரில் தாழ்த்தப் பட்டவர்களும் பிற்பட்டவர்களும் தனித் தனியாக அணி திரண்டு வருகிறார்கள். பீகாரில் ''தலித்சேனா'' என்ற பெயரில் தாழ்த்தப்பட்டவர்கள் பெண்கள் உள் ளிட்ட படைகட்டி ஆயுதப் பயிற்சி எடுத்து வருகிறார்கள். உ.பி.யில் பகுஜன் சமாஜ் கட்சி கடந்த தேர்தலில் கணிசமான இடங்களை கைப்பற்றியதும் இதன் விளைவே.

மேலும் தாழ்த்தப்பட்டவர்களி டையே காணப்படும் விழிப்புணர்வு, போர்க்குணத்தின் காரணமாகவே தற் போது மேல்சாதி வெறியர்களின் தாக்கு தல்களும் மூர்க்கமாகியுள்ளன. அரசு இட ஒதுக்கீடு கேட்டுப் போராடும் 'பிற்பட்ட' வர்களுக்கு எதிராகப் பார்ப்பனர் உள் ளிட்ட முற்பட்ட சாதியினர் எப்படி மூர்க் கமாகப் பாய்ந்தனரோ அதைவிட மேல திகமாக இப்'பிற்பட்ட' சாதியினர் தாழ்த் தப்பட்டவர்களின் மீது பாய்ந்து குதறுகி றார்கள். இதை எதிர்கொள்ளும் திராணி தாழ்த்தப்பட்டோர் பிரதிநிதி எனக் கூறிக் கொள்ளும் பிழைப்புவாத அமைப்புகளி டமோ, வேறுபிற சாதி சங்கங்களிடமோ இல்லை; இருக்கவும் முடியாது. அதனா லேயே உ.பி., பீகார் தாழ்த்தப்பட்ட மக் கள் தொடர்ந்து சகிக்க முடியாத துய ருக்கு ஆளாகிறார்கள்.

● சுப்பு



படிப்பகம்

www.padippakam.com

# புதிய பொருளாதாரக் கொள்கை ஏழைகள் என்ன இடிதாங்கிகளா?

இராமையா ஒரு கைத்தறி நெசவாளி; ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர். தொழில் சரிவர நடக்காததால் கடனில் தத்தளித்துக் கொண்டு இருந்தார் அவர். 91-ஆம் ஆண்டின் மத்தியில் அவர் தனது தறியில் நெய்யப் பயன்படுத்தி வந்த நூல், திடீரென கிலோ ஒன்றுக்கு எழுபது ரூபாய் அதிகரித்தது. இந்த விலையேற்றம் இராமையாவைத் திக்குமுக்காட வைத்துவிட்டது.

ஏற்கனவே வாங்கிய கடனை அடக்க முடியாத பொழுது புதிதாக யார் கடன் தருவார்கள்? வெளியே தலை காட்ட முடியவில்லை அவரால்; வீட்டினுள்ளோ பட்டினியால் சுருண்டு படுத்துக் கிடந்த குழந்தைகளைப் பார்க்கும் பொழுது நெஞ்சே வெடித்துவிடும் போல் இருந்தது. வாழ்வளித்து வந்த தறியிலேயே சுருக்கு போட்டுக் கொண்டு தனது வாழ்வை முடித்துக் கொண்டார், அவர்.

தந்தை இறந்த பின் குடும்ப பாரத்தை ஏற்றுக் கொண்டான் மூத்த மகனான வெங்கையா. ஒரு வருடம்கூட அவனால் அந்த அரைப்பட்டினி - முழுப் பட்டினி நரக வேதனையைச் சகிக்க முடியவில்லை. இருபத்தாறு வயது முடிவதற்குள்ளே பூச்சி மருந்தைக் குடித்து வாழ்க்கையை முடித்துக் கொண்டான். இப்படி ஆந்திர மாநிலத்தில் மட்டும் 110 கைத்தறி நெசவாளிகளை, அறிவித்த மாத்திரத்திலேயே பலி கொண்டது புதிய பொருளாதாரக் கொள்கை.

ராஜீவ் காலத்தில் கொண்டு வரப்பட்ட "புதிய ஜவுளிக் கொள்கை" கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கையைச் சிதைத்தெறிந்தது; சிதைந்து போன அவர்களின் வாழ்க்கையைச் சமாதி கட்ட வந்தாற்போல அமைந்துவிட்டது, புதிய பொருளாதாரக் கொள்கை.

தாராளமயமாக்கலின் காரணமாக ஏற்றுமதி பெருகி வளம் கூடும் என்றார்கள். முதலாளிகளைப் பொருத்தவரை அது உண்மைதான். 91-ஆம் ஆண்டின் முன்பு வரை 5.3 கோடி கிலோவாக இருந்த பருத்தி நூலின் ஏற்றுமதி அந்த ஆண்டிலேயே 14.5 கோடி கிலோவாக உயர்ந்தது. கைத்தறிக்குப் பயன்படும் நூலின் ஏற்றுமதி 86.8 சதவீதமாக அதிகரித்தது.

இப்படி உள்நாட்டு தேவையை முற்றிலுமாகப் புறக்கணித்ததுதான் நூல் விலையேற்றத்துக்கு முக்கிய காரணமாய் அமைந்தது. கைத்தறி நெசவாளர்களைப் பாதுகாக்க அரசு கொண்டு வந்திருக்கும் சட்டங்கள், உச்ச நீதிமன்றத்தி ஆணை அனைத்தையும் செல்லாக் காசாக்கிவிட்டது பு.பொ.கொ. இதனால் நெசவாளர்களின் உற்பத்தி குறைந்து, கைத்தறி துணிகளின் ஏற்றுமதி 24 சதவீதத்தில் இருந்து 9.75 சதவீதமாகச் சுருங்கிப் போனது.

இந்நூல் விலையேற்றம் கைத்தறி நெசவாளர்களை மட்டும்தான் பாதித்தது என்றில்லை. மகாராஷ்டிராவிலும் ஒரிஸ்ஸாவிலும் கிட்டத்தட்ட 35,000 விசைத்தறிக் கூடங்கள் இழுத்து மூடப்பட்டன; இதனால் 2 லட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை இழந்து போயினர். தமிழ்நாட்டில் கோவை, ஈரோடு மாவட்டங்களைச் சேர்ந்த 5 லட்சத்துக்கும் அதிகமான விசைத்தறி - பனியன் தொழிலாளர்களும் உரிமையாளர்களும் கடந்த இரண்டு ஆண்டுகளாக நூல் விலையேற்றம் மற்றும் மின் கட்டண உயர்வை எதிர்த்து கடையடைப்பு, உண்ணாவிரதம், ஆர்ப்பாட்ட ஊர்வலம் எனப் போராடி வருகிறார்கள்.

ooo

அசோக் ஜிஜபா - பம்பாயைச் சேர்ந்த இவர் "இந்துஸ்தான் லீவர் லிட்." கம்பெனி தொழிலாளி. 1988-இல் மூடப்பட்ட இந்நிறுவனம் மீண்டும் திறக்கப்பட்ட பொழுது, "மீண்டும் நிறுவனம் மூடப்படும் அபாயமுள்ளது" எனத் திட்டமிட்டு நிறுவன மேலாளர்களால் வதந்தி பரப்பப்பட்டது. இதனால், "தனது தங்கைக்குத் திருமணம் செய்து வைக்க இயலுமா?" எனப் பயப்படத் தொடங்கினார், அசோக் ஜிஜபா.

எனவே நிறுவன மேலாளர்களின் பேச்சைக் கேட்டு "தன் விருப்ப ஓய்வுக்கு" எழுதிக் கொடுத்தார். கிடைக்கும் பணத்தில் தனது தங்கைக்குத் திருமணம் செய்து வைத்துவிட்டு, ஏதாவது தொழில் தொடங்கி பிழைத்துக் கொள்ளலாம் என்ற இரண்டுமே அவர் வாழ்க்கையில் நிறைவேறவில்லை. தனது இரு குழந்தைகளைப் பத்தாவது வரை கூட இனி "தன்னால் படிக்க வைக்க முடியாது" என மனமொடிந்து போனார், அசோக் ஜிஜபா.

மோகன் ஹரி - ஏற்கனவே குடிப்பழக்கமுள்ள தொழிலாளி. "தன் விருப்ப ஓய்வு"க்குப் பின் அவர் நினைத்தபடி வாழ்க்கை அமையாததால் மேலும் மேலும் குடிக்க ஆரம்பித்தார். ஒரு நாள் குடிபோதையில் நிலை தடுமாறி மாடியில் இருந்து விழுந்து இறந்து போனார். இன்று அவரது விதவை மனைவி, மகள், மகன், தாய் என ஆறுபேர் கொண்ட குடும்பம், வெறும் 1100 ரூபாய் ஓய்வூதியத்தில், பம்பாய் நகரில் காலந்தள்ள வேண்டிய அவலத்தில் இருக்கிறார்கள்.

உத்திர பிரதேச மாநிலம் கான்பூரில் இத்திட்டத்தின் அடிப்படையில் பல பஞ்சாலைகள் அடுத்தடுத்து மூடப்பட்டன; அதன் பின் அந்நகரில் சீரழிவு கலாச்சாரமான பரிசுச் சீட்டு விற்பனை அதிகரிக்கத் தொடங்கியதை எல்லோரும் குறிப்பிடுகிறார்கள்.

புதிய பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்தத் தொடங்கிய பின், "தன் விருப்ப ஓய்வு", "தங்கக் கை குலுக்கல்" என்ற பெயரில் தொழிலாளர்கள் மீது தொடுக்கப்பட்டு வரும் தாக்குதல் இது. இரண்டே வருடங்களில் அரசு மற்றும் தனியார் தொழிற்சாலைகளில் இருந்து 73,287 தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் வெளியேற்றப்பட்டனர். ராவ் அரசும் தன் பங்குக்கு ஓய்வு பெறும் தொழிலாளர்களின் மறு வாழ்வுக்காக "தேசிய நிவாரண நிதி" ஒன்றினை ஏற்படுத்தியிருப்பதாக ஆசை காட்டி மோசம் செய்தது.

மற்றொருபுறமோ, அந்நிய மூலதனத்தைத் தடையின்றி நாட்டிற்குள் அனுமதிப்பதன் மூலம் "அதிக அளவில் வேலை வாய்ப்பை உருவாக்க முடியும்" எனத் தாராளமயமாக்கல் கொள்கையினை நியாயப்படுத்தி வருகிறார்கள், இவர்கள். ஆனால் உண்மை நிலையோ வேறு மாதிரி

அகோக் ஜிஜபாவும் அவரது குடும்பமும்; இருட்டான எதிர்காலம்.





படிப்பகம்

www.padippakam.com

யாக உள்ளது. 1992-93-ஆம் ஆண்டில் வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 1 கோடியே 73 லட்சமாகும். அடுத்த ஒரே ஆண்டில் இவ்வெண்ணிக்கை 12 லட்சம் அதிகரித்து 1 கோடியே 85 லட்சத்தைத் தொட்டுள்ளது.

ООО

**பீ**காரின் பலாமு பகுதியினைச் சேர்ந்தவர் கௌரா தேவி என்ற 60 வயது மூதாட்டி. திடீரென ஒரு நாள் வாந்தியெடுத்து மயங்கி கீழே சரிந்தார் இவர். வாய் கோணிப்போய் கையும் காலும் வெட்டியிழுக்கத் தொடங்கியது. சிறிது நேரத்தில் சப்த நாடியும் அடங்கிப் போய், மரணமடைந்தார் அம்மூதாட்டி.

தொடர்ச்சியாக மூன்று நாட்களாக உண்ண உணவும் குடிக்கத் தண்ணீரும் இல்லாமல் பட்டினியாகக் கிடந்ததால் நேர்ந்த மரணமிது. 93-ஆம் வருடத்தில் மட்டும் பீகாரில் பலாமு பகுதியில் 15 ஆதிவாசி மக்கள் பட்டினிச் சாவிற்குப் பலியாகிப் போயினர்.

ஒரிஸ்ஸாவின் களகந்தியில் இருந்து பட்டினிச் சாவுகள் இப்பொழுது பீகாருக்கும் மத்திய பிரதேசத்துக்கும் பரவியிருக்கிறது. கனிவளம் நிறைந்த மத்திய பிரதேசத்தின் பஸ்தார் மற்றும் அதைச் சுற்றியுள்ள மூன்று மாவட்டப் பகுதிகளிலும் 92-ஆம் ஆண்டு 6 பேரும், 93-ஆம் ஆண்டின் மே மாதம் முடிய 11 பேரும் பட்டினியால் இறந்து போயுள்ளனர்.

நாட்டிலேயே மிக அதிக அளவு அந்நிய மூலதனத்தைக் கவர்ந்திழுக்கும் மாநிலம் மகாராஷ்டிரா என பெருமை பேசப்படுகிறது. ஆனால், கடந்த ஒரே ஆண்டில் (1993-இல்) அம்மாநிலத்தின் விதர்பா பகுதியில் ஐந்து வயதுக்கும் கீழான 170 குழந்தைகள் சத்துணவுமின்மையால் வாந்தி பேதிக்கு ஆளாகி இறந்து போயின. அருகாமையில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இல்லாதது அக்குழந்தைகளின் மரணத்திற்கு முக்கிய காரணமாய் அமைந்தது.

வெந்ததைத் தின்று விதி வந்தால் சாவோம் என்பதைவிட மோசமாக உள்ளது நமது நாட்டு பழங்குடி மக்களின் வாழ்வு. வறட்சி தாக்கிய பகுதிகளெங்கும் காட்டு கிழங்குகளும் இலைகளும் தான் உணவு. புழுத்துப் போன ரேஷன் அரிசியை நினைத்துப் பார்ப்பது கூட கைமீறிய காரியம் அவர்களுக்கு; அப்படியானதொரு வறுமை. சிறார்களுக்கும் குழந்தைகளுக்கும் இக்காட்டு கிழங்குகளைக் கூடத் தரமுடியாது. குலைப்பட்டினியாய் நோய் தாக்கி கொத்து கொத்தாய் இறந்து போகிறார்கள், அவர்கள்.

ООО

சென்னையில் அரசினர் பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக உள்நோயாளியாகச் சேர்ந்தார், சுந்தரம். சேர்ந்த ஒரு மாதத்திற்குள்ளாகவே, தனக்குத் தேவையான மருந்துகளை வாங்குவதற்கு பத்தாயிரம் ரூபாய் வரை செலவு செய்துள்ளார், அவர். இங்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமெனில், தையல் போடும் பொருட்களை நோயாளிதான் வாங்கிவர வேண்டும்; இதற்கு மட்டும் நாலாயிரம் ரூபாய் வரை செலவு செய்ய வேண்டியிருக்கும்.

வட்டிப்பணம் வாங்கியோ அல்லது தாலியை, பண்ட பாத்திரங்களை அடமானம் வைத்தோ நாலு காசை கையில் வைத்துக் கொண்டுதான் அரசு மருத்துவமனைகளின் வாசலையே மிதிக்க முடியும் என்ற நிலை உருவாகிவிட்டது. இதை நியாயப்படுத்துவது போலவே இப்போது பார்வையாளர் கட்டணம் வசூலிக்கத் தொடங்கிவிட்டது, ஜெயா அரசு.



**அந்நிய நிறுவனங்களை எதிர்த்தும் மீனவர்கள் போராட வேண்டிய சூழல் உருவாகிவிட்டது.**

இப்படி மருத்துவம், பொது சுகாதாரம், கிராமப்புற வறுமை ஒழிப்பு - வளர்ச்சித் திட்டங்களுக்கான ஒதுக்கீட்டைக் குறைப்பது; விவசாயத்திற்கும் ரேஷன் பொருட்களுக்கும் வழங்கி வரும் மானியங்களை வெட்டுவது - இதன் மூலம் அடித்தட்டு மற்றும் நடுத்தர மக்களை மேலும் கசக்கிப் பிழிந்து, தங்களின் நிதிப் பற்றாக்குறையைச் சமாளிக்கின்றன மைய - மாநில அரசுகள்.

இது ஒருபுறமிருக்க, கடந்த வருடம் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்யும் முன்பே சமையல் எரிவாயு, சர்க்கரை, அரிசி, கோதுமை, பெட்ரோல், டீசல் போன்ற பொருட்களின் விலையை உயர்த்தி 43000 கோடி ரூபாய்க்கு வருமானம் தேடிக் கொண்டது ராவ் அரசு; விவசாய விளைபொருட்களுக்கு ஏற்றுமதி மீதிருந்த கட்டுப்பாட்டினை நீக்கியதால் காபித்தூளின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 200/- என உயர்ந்தது. சர்க்கரை வழங்கலில் செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தி ஆலை அதிபர்கள் கொள்ளை இலாபமடிக்க வகை செய்யப்பட்டது.

கடந்த மூன்றாண்டுகளுக்குள் உணவுப் பொருட்கள் கிட்டத்தட்ட 60 சதவீதமும் மில் துணிமணிகள் 42.5 சதவீதமும், உயிர் காக்கும் மருந்துகள் 41.9 சதவீதமும் மின்சாரம் 63.4 சதவீதம் அளவிற்கும் விலைகள் உயர்ந்துள்ளன.

ООО

**க**டந்த இரண்டு வருடங்களின் முன் கேரள கட்டுமர மீனவர்கள், இயந்திரப் படகு மீன் பிடிப்பை எதிர்த்துப் போராடத் தொடங்கினார்கள். தினந்தோறும் சாலை மறியல், புகை வண்டி மறியல் என அவர்களின் போராட்டம் நான்கு மாதங்களுக்கும் மேலாக நடந்தது. பதினெட்டு இயந்திரப் படகுகளை எரித்துவிடுமளவு மீனவர்களின் போராட்டம் போர்க்குணம் கொண்டதாக உருவெடுத்தது.

"வருடத்தில் மூன்று மாதங்களுக்கு மட்டுமே நாங்கள் தொழில் செய்தால், குடும்பத்தோடு தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறுவழியில்லை" என்கிறார் தும்போலி கிராமத்தைச் சேர்ந்த ஃபெலிக்ஸ் என்ற மீனவர். இழந்துவரும் தங்களின் உரிமையைப் பாதுகாக்க இயந்திரப் படகுகளைக் கொளுத்துவதுதான் ஒரேவழி என்பது அவரது வாதம். கட்டுமர மீனவர்கள் மீன் பிடிப்பது குறைந்து போனதால் கிராமத்துப் பெண்களுக்குக் கிடைத்துவந்த மீன் உலரப் போடும் வேலையும் இல்லாது போனது.

கேரள மீனவர்களின் போராட்டம் முடிவடைந்து ஒரு வருடம் முடிவதற்குள்ளாகவே, நாடு முழுவதுமுள்ள பரம்பரை மீனவர்களைத் துடைத்து அழித்துவிடும்



படிப்பகம்

www.padippakam.com

திட்டமொன்றை தயாரித்தது மத்திய அரசு. கிட்டத்தட்ட 200 அந்நிய மற்றும் தனியார் நிறுவனங்களை ஆழ்கடல் பகுதியில் மீன் பிடிக்க அனுமதித்திருப்பது தான் அது.

இப்படி நாட்டின் பாரம்பரியமான தொழில்களிலும் அரசின் கேந்திரமான தொழிற்துறைகளிலும் தனியாரின் அந்நிய நிறுவனங்களின் மூலதனம் நுழைய சலுகைகள் காட்டப்பட்டன.

காய்கறி - பழம் - மலர் வகைகளைப் பயிரிடுவதற்கு தரகு முதலாளிகளின் நிறுவனங்களுக்கும், பெப்சி போன்ற பன்னாட்டு தொழிற் கழகங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டது. மின் துறையிலும் தொலை தொடர்புத் துறையிலும் அந்நிய மற்றும் தனியார் நிறுவனங்கள் நுழைந்துள்ளன.

மருந்து உற்பத்தியில் அந்நிய ஏக போக நிறுவனங்கள் நுழைவதற்கு ஏற்றவாறு புதிய மருந்துக் கொள்கை அறிவிக்கப்பட்டது. இவற்றோடு எண்ணெய் வளம், சுரங்கத் தொழில், பத்திரிகை, கேபிள் டி.வி., வங்கி, பங்கு மூலதனச் சந்தை, இறால் பண்ணைகள், உணவு - கேளிக்கை விடுதிகள் போன்றவற்றிலும் தனியாரும் அந்நிய ஏகபோக நிறுவனங்களும் நுழையும் வண்ணம் இந்தியத் தொழில் மற்றும் சேவைத் துறையில் தாராளமயமாக்கம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

ООО

''மூலதனம் அதிகம் தேவைப்படும் தொழில்களில் அந்நிய முதலீட்டிற்கு அனுமதியளிப்பதன் மூலம், அரசு தனது நிதி மூலதனப் பற்றாக்குறையை ஈடு செய்து கொள்ளும்; இதன் காரணமாக கல்வி - மருத்துவம் போன்ற மக்களின் நல வாழ்வுத் திட்டங்களில் கூடுதலாகக் கவனம் செலுத்த முடியும்; பண வீக்கத்தைக் கட்டுப்படுத்தி விலைவாசி உயர்வதைத் தடுக்க முடியும்'' என அழகாகச் சித்திரம் தீட்டி காட்டினார்கள். ஆனால் நடந்ததோ ''எய்ட்ஸ்'' நோய் கண்டவனை காச நோயும் சேர்த்துப் பிடித்துக் கொண்ட கதையாக, இந்தியப் பொருளாதாரத்தின் வீழ்ச்சியை பு.பொ.கொ. துரிதப்படுத்திவிட்டது.

நாட்டின் அரசியலில் நிலைத்தத் தன்மை நிலவாததால் ராவ் அரசு எதிர்பார்த்த அளவு ஏகாதிபத்தியங்களிடமிருந்து நிதி மூலதனத்தைப் பெற முடியவில்லை; அதே சமயம் அதற்குக் கட்ட வேண்டிய அசலும் வட்டியும் கூடுதலாகிக் கொண்டே சென்றது, மூலதனப் பற்றாக்குறையை அதிகமாக்கியது. மேலும் தரகு முதலாளித்துவ நிறுவனங்களுக்கு சுங்கத்தீர்வை உள்ளிட்ட பலவிதமான வரிச் சலுகைகளை அளித்ததால் அரசின் நிதி வருமானம் குறைந்து போனது. இவை காரணமாக அரசின் எதிர்பார்ப்பையும் மிஞ்சி இந்நிதியாண்டின் இறுதியில் நிதிப்பற்றாக்குறை 95,000 கோடி ரூபாயைத் தொட்டுவிடும் என மதிப்பிடப்படுகிறது.

> கடந்த மூன்றாண்டுகளில் அடித்தட்டு மற்றும் நடுத்தர வர்க்கத்தினர் மத்தியில் வறுமை அதிகரித்தும் வாங்கும் சக்தி குறைந்து போயுள்ளதுமே இக்கொள்கையின் தோல்விக்குச் சான்று.

பண வீக்கத்தை ஏழு சதவீதத்துக்குள் கட்டுப்படுத்துவதுதான் பு.பொ.கொ.யின் நோக்கம். ஆனால் கடந்த மூன்றாண்டுகளில் இரண்டு மாதங்கள் மட்டும் தான் பண வீக்கம் ஏழு சதவீதத்துக்குள் இருந்துள்ளது. அன்றாடம் பொருள் வாங்குவோர் நிலையில் இருந்து கணக்கிடும் பொழுது இன்று பணவீக்கம் 15 சதவீதமாக உள்ளது.

ООО

ஆந்திர - கர்நாடக மாநிலத் தேர்தல்களில் விழுந்த அடியால் திடீரென புத்தி தெளிய பெற்றவர்களைப் போல சில காங்கிரசு தலைவர்கள் பு.பொ.கொ-ஐ இப்பொழுது விமர்சிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். ''பொருளாதாரக் கொள்கைகள் மிகப் பெரிய முதலாளிகளுக்கும் அந்நிய ஏகபோக நிறுவனங்களுக்கும் மட்டுமே பயன்தரத்தக்க வகையில் அமைந்துவிடக் கூடாது'' என நீலிக் கண்ணீர் வடிக்கிறார்கள், அவர்கள்.

ஆனால் இக்கொள்கையின் சூத்திரதாரியான மன்மோகன் சிங்கோ, ''தாராளமயமாக்கலின் சாதனைகளைச் சரியான விதத்தில் கட்சி பிரச்சாரம் செய்யவில்லை'' என மழுப்புகிறார்; ''இதன் பயன்களை நீண்ட நாள் நோக்கில் காண வேண்டும்'' என ஆருடம் கூறுகின்றார். சமீபத்தில் கல்கத்தாவில் கூடிய முதலாளிகளின் கும்பலோ, ''சீர்த்திருத்தங்களை எவ்வித மாற்றமும் இன்றித் தொடர வேண்டும்'' என எல்லா ஓட்டுக்கட்சிகளுக்கும் எச்சரிக்கை விடுகின்றது.

> என்.டி.ஆரின் மலிவு விலை அரிசி திட்டம் கவர்ச்சிவாதம்தான் என்றாலும், அதை இன்றுள்ள நிலையிலேயே மிக எளிதாக நடைமுறைப்படுத்த வழிமுறைகள் உள்ளன. நடப்பு நிதியாண்டில் தரகு முதலாளிகளுக்கு 16,475 கோடி ரூபாய் அளவிற்கு வரிச்சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. இவ்வரி விலக்கு அளிக்கப்படாமல் அத்தொகை வசூலிக்கப் பட்டிருக்குமானால் ஆந்திர மாநிலத்திற்குரிய பங்குத் தொகையாக 1100 கோடி ரூபாய் கிடைத்திருக்கும். இத்தொகையினைக் கொண்டு மலிவு விலை அரிசி திட்டத்தை நடைமுறைப் படுத்தி விட முடியும். இப்படி ஏழை எளிய மக்களின் நலனுக்காக முதலாளிகளிடம் வரிபோட்டு எடுத்துக் கொள்வதைத்தான் மன்மோகன் சிங்கும் அவரது எடுபிடிகளும் ''பொருளதாரத்தைப் பின்னுக்கிழுப்பதாகும்'' என எச்சரிக்கை செய்கிறார்கள்.

எதிர்க்கட்சிகளோ மக்கள் மத்தியில் அதிகரித்து வரும் வறுமையையும் அவர்களது எதிர்ப்புணர்வுகளையும் கவர்ச்சிவாதக் கோஷங்களாக்கி, காங்கிரசிடமிருந்து அதிகாரத்தைத் தட்டிப் பறித்துக் கொள்ளவுமே முயலுகின்றன. பா.ஜ.க., ''நாங்கள் தாராளமயத்தை ஆதரிக்கிறோம்; ஆனால் பன்னாட்டு நிறுவனங்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இந்தியத் தொழிற்துறையை விழுங்குவதை எதிர்க்கிறோம்'' எனத் தாராளமயமாக்கலுக்குப் புது விளக்கம் தருகிறது. 'மார்க்சிஸ்டு'களோ ''புதிய பொருளாதாரக் கொள்கையை அணுகும் விதத்தில் தங்களுக்கும் காங்கிரசுக்கும் வித்தியாசமிருப்பதாக''ச் சரடு திரிக்கின்றனர். ''மின்சாரம் மற்றும் தொலை தொடர்புத் துறைகளில் பன்னாட்டு நிறுவனங்கள் நுழைவதை நாங்கள் ஆதரிக்கிறோம்'' என்கிறார் ஜனதா தளத்தைச் சேர்ந்த கர்நாடக மாநில முதல்வர் தேவ கௌடா.

புதிய பொருளாதாரக் கொள்கை அதன் இரு நோக்கங்களை - ஒன்று மூலதனப் பற்றாக்குறையைக் குறைப்பது; மற்றொன்று விலைவாசியைக் கட்டுப்படுத்துவது - நிறைவேற்றுவதில் மிகப் பெரும் தோல்வியைச் சந்தித்துவிட்டது. இதனால் எழுந்துள்ள பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்க ஏகாதிபத்தியங்களின் கொள்ளைக்கு எஞ்சி நிற்கும் தடைகளை நீக்குவது; மறைமுக வரி விதிப்பை அதிகரிப்பது; மக்களின் நலவாழ்வு திட்டங்களுக்கான ஒதுக்கீட்டையும் மானியங்களையும் குறைப்பது - இவை தவிர வேறு வழிகள் ஆளும் வர்க்கங்களுக்கு கிடையாது. காங்கிரசு நினைத்தால்கூட மறைமுக வரிவிதிப்பை அதிகரிக்காமல், ஒரு கவர்ச்சிவாத பட்ஜெட்டைத் தயாரித்துவிட முடியாது.

மேலும் மேலும் அந்நிய மூலதனத்தைச் சார்ந்து நிற்பது சமீபத்தில் மெக்சிகோவில் ஏற்பட்டுள்ளதைப் போல பொருளாதார ஓட்டாண்டி நிலைக்கு நாட்டை நெட்டித் தள்ளும்; நாடு ஏகாதிபத்தியங்களுக்கு முற்றிலும் அடிபணிந்து, மறுகாலனியாவதைத் துரிதப்படுத்தும். அதன் முன்னே உழைக்கும் மக்கள் ஏகாதிபத்தியங்களையும் உள்நாட்டு அடிவருடிகளையும் சவக்குழிக்கு அனுப்ப வலுவான அமைப்புகளைக் கட்டியெழுப்ப வேண்டும்; அதற்கு புரட்சிகர இயக்கங்களோடு தோளோடு தோள் நிற்க வேண்டும்!

● ரஹீம்.



படிப்பகம்




## வாரிசுகளின் மோசடி: காங்கிரசுக்குப் போட்டியாக இந்து பரிவாரங்கள்!

விசுவ இந்து பரிஷத் அமைப்பின் பொதுச் செயலாளர் அசோக் சிங்காலின் சகோதரர் மகன் ரவி அங்கால். இவர் தனது நண்பர்களுடன் சேர்ந்து நடத்தி வரும் கணிப்பொறி வியாபாரத்தின் மூலம் 190 கோடி ரூபாய் அளவிற்கு அந்நிய செலாவணி மோசடி செய்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. கடந்த 1993-ஆம் ஆண்டில் இதே போன்று மற்றொரு மோசடி வழக்கில் ரவி சிங்காலைக் கைது செய்ய போலீசார் முயன்ற பொழுது, ரசியாவிற்குத் தப்பிச் சென்று விட்டிருக்கிறார் இவர். 'காங்கிரசின் ஊழல்களை அம்பலப்படுத்தி, 'தேசிய' நலன் காக்கப் புறப்பட்டிருக்கும் பா.ஜ.க. இன்னும் இந்த வாரிசு திருவிளையாடலைப் பற்றி வாய் திறக்கவில்லை.

## சிதைத்தாலும் எரித்தாலும் செங்கொடி அழியாது!

தோழர்கள் வில்ஹெல்ம் லீப்னெக்ட்டும் ரோசா லக்சம்பர்க்கும் ஜெர்மன் பொதுவுடமைக் கட்சியைக் கட்டியதில் பெரும் பங்காற்றியவர்கள்; 75 ஆண்டுகளுக்கு முன்பு ஆளும் வர்க்க எதிரிகளால் படுகொலை செய்யப்பட்டு தியாகியானவர்கள். லீப்னெக்ட், மிகப் பிரபலமான பொதுவுடமை நூலான "சிலந்தியும் ஈயும்" என்பதனை எழுதியவர். கடந்த ஜனவரி 15-ந் தேதி இவ்விரு தியாகத் தோழர்களின் 75-வது நினைவு தினம் வந்தது. என்றுமே கண்டிராத அளவு அந்நாளன்று 50,000-க்கும் அதிகமான ஜெர்மானிய மக்கள் தலைநகர் பெர்லினில் கைகளில் செங்கொடிகளோடு ஊர்வலமாகச் சென்று அவர்களின் தியாகத்தை நினைவு கூர்ந்தனர்; பல மணி நேரம் வரிசையில் காத்திருந்து அவர்களது சமாதிகளில் மலர் வளையம் வைத்து சிவப்பஞ்சலி செலுத்தியுள்ளனர். மேற்கு ஜெர்மனி கிழக்கை விழுங்கிய பின், "இனி கம்யூனிச தலைவர்களையெல்லாம் மக்கள் மறந்துவிடுவார்கள்" என்ற ஏகாதிபத்தியவாதிகளின் நப்பாசைகளுக்கு ஆப்பறைந்துள்ளது, இந்நிகழ்ச்சி.

## பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்

பொருளாதார விவகாரத்தில் மட்டுமல்ல, அகில உலக கிரிமினல் பேர்வழியான சந்திர சுவாமியுடனான நெருக்கத்திலும் காங்கிரசைப் பின்பற்றத் தொடங்கிவிட்டது "மார்க்சிஸ்ட் கட்சி". சமீபத்தில் நடந்த சந்திர சுவாமியின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டுள்ளார், அக்கட்சியின் மாநில நாடாளுமன்ற உறுப்பினர் அமல் தத்தா. இவர் முதல்வர் ஜோதிபாசுவின் மருமகனும் கூட. இதற்காக அமல் தத்தாவை "ஜனசக்தி" நாளேட்டில் வெளிப்படையாகக் கண்டித்த 'மார்க்சிஸ்டு'கள் ஜோதிபாசுவின் மகன் சந்தன் பாசுவுக்கும் சந்திர சுவாமிக்கும் உள்ள நெருக்கத்தைப் பற்றி வாய் திறக்கவில்லை. சமீபத்தில் நடந்த கட்சியின் "பொலிட் பீரோ" கூட்டத்தில் ஜோதிபாசு "பிரதமர் ராவை கட்சி ஆதரிக்க வேண்டும்" என வக்காலத்து வாங்கியதற்கு இந்த நெருக்கமும் ஒரு காரணமாம்!

## வாக்காளர் அடையாள அட்டை சர்வரோக நிவாரணியா?

பீகாரில் தேர்தல் வருவதையொட்டி, வாக்காளர்கள் மத்தியில் விழிப்புணர்வு இயக்கத்தை நடத்தி வருகின்றன தன்னார்வக் குழுக்கள். அம்மாநிலத்தின் முஸாபர் மாவட்டத்தில் மட்டும் இவ்வமைப்பினர் சந்தித்த 14,000 தாழ்த்தப்பட்ட வர்களுள் கிட்டத்தட்ட 97 சதவீதம் பேர் இது நாள் வரை எந்தவொரு தேர்தலிலும் வாக்களித்ததில்லை எனக் கூறியுள்ளனர். தங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் அடையாள அட்டைகளைக் கூட தேர்தல் சமயத்தில் "ஆளுங்கட்சி - மேல் சாதி குண்டர் படையினர் பறித்துச் சென்றுவிடுவார்கள்" என்றும் கூறியுள்ளனர். இத்தாழ்த்தப்பட்ட மக்கள், ஆயுத அடியாள் படையுடன் வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றி கொள்வதும் தான் அபாயகரமானது எனக் கிட்டத்தட்ட 30 சதவீத வாக்காளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். உண்மை இப்படியிருக்க வெறும் காகித அட்டைகள் கொடுப்பதையே மிகப் பெரும் தேர்தல் சீர்திருத்தமாக பம்மாத்து பண்ணித் திரியும் சேசனை என்னவென்று சொல்வது?

## துணை இராணுவப் படையின் கொலை வெறிக்கு அப்பாவிகள் பலி.

சனவரி 7-ந் தேதியன்று மணிப்பூர் தலைநகர் இம்பாலில், போராளிகளுக்கும் துணை இராணுவப் படையினருக்கும் இடையே நடந்த மோதலில், அரசுப் படையைச் சேர்ந்த ஒருவனுக்கு பலத்த காயம் ஏற்பட்டது. இதனால் வெறி கொண்ட அவனது சகாக்கள், தங்களது முகாமுக்கு வெளியே போவோர் - வருவோரைக் கண்மூடித்தனமாகச் சுட்டுத் தள்ளினர். இதில் ஒன்பது அப்பாவிகள் பலியானதோடு, மேலும் இருவர் படுகாயமடைந்தனர். இக்காட்டு மிராண்டித்தனத்தைக் கண்டித்து அம் மாநில மக்கள், ஊரடங்கு உத்தரவையும் மீறி சாலை மறியலில் ஈடுபட்டனர். ஆட்டோ ஓட்டுநர்கள் தங்கள் வாகனங்களைக் கொண்டு போக்குவரத்தைத் தடை செய்தனர். மறியல் செய்தவர்கள் மீதும் போலீசைக் கொண்டு தாக்கியது காங்கிரசு அரசு!



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# பாசிசத்தில் முடிந்தது யேல்ட்சினின் 'புரட்சி'

பதவி வெறிபிடித்த சர்வாதிகாரிகள், தமது செல்வாக்கு சரியும்போது கவர்ச்சிவாத ஆரவாரத்தில் இறங்குவார்கள்; அல்லது குறுகிய தேசிய வெறி இனவெறியைக் கிளறிவிட்டு நாட்டின் ஐயக்கியம்-ஒருமைப்பாட்டைக் கட்டிக் காக்கும் மாபெரும் தேசியவாதியாகத் தம்மை காட்டிக் கொண்டு அடக்குமுறை சதிராட்டத்தில் இறங்குவார்கள். ஜனநாயக முகமூடி அணிந்த அமெரிக்க அதிபர் கிளிண்டன் தனது செல்வாக்கு சரியத் தொடங்கியதும் சின்னஞ்சிறு நாடான ஹெய்தி மீது அதிரடித்தாக்குதல், ஈராக் மீது முற்றுகை மிரட்டல் என போர்வெறி பிடித்தாடினார். அதேபோல, ரஷிய அதிபர் எல்ட்சின் தனது நாட்டு மக்களிடையே செல்லாக்காசாகி விட்ட நிலையில், ரஷியாவை ஒட்டியுள்ள சின்னஞ்சிறு குடியரசான செசன்யா மீது போர்வெறித் தாக்குதல் நடத்திக் கொண்டு சர்வாதிகார சதிராட்டம் போட்டு வருகிறார்.

செசன்யா-ரஷியாவை ஒட்டி காகசஸ் மலைத்தொடரிலுள்ள சின்னஞ்சிறு குடியரசு. செசன்யா மக்கள் மொழியாலும் இனத்தாலும் பண்பாட்டாலும் ரஷிய தேசிய இனத்திலிருந்து வேறுபட்டவர்கள். எண்ணெய், எரிவாயு வளமிருந்து போதிலும், வளர்ச்சித் திட்டங்கள் புறக்கணிக்கப்பட்ட பின்தங்கிய பூமியாகவே அது நீடித்தது. காகசஸ் மலைப்பகுதியிலுள்ள செசன்யாவைச் சுற்றி இங்கு ஷெஷ்யா, ஓசெஷ்யா, தார்த்தார்ஸ்தான், பஷ்கோர்டாஸ்தான் ஆகிய சிறுபான்மை தேசிய இனப் பிரதேசங்கள் உள்ளன. காகசஸ் பிராந்தித்தையும் ரஷியாவையும் இணைக்கும் முக்கிய இருப்புப் பாதை செசன்யா வழியாகச் செல்கிறது. இது தவிர ரஷியாவின் எண்ணெய், எரிவாயுக் குழாய்கள் இந்நாட்டின் வழியாகத்தான் செல்கின்றன. குறிப்பாக, ரஷிய ஒன்றியத்திலிருந்து பிரிந்து சென்ற அஜர்பெய்ஜான் குடியரசின் எண்ணெய் வயல்களையும், ரஷியாவின் கருங்கடல் பிராந்தியத்தையும் இணைக்கும் குறுக்கு வழிப் பாதையாக செசன்யா உள்ளது. இதனால் செசன்யா, ராணுவ ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகக் கருதப்படுகிறது.

1991-ல் சோவியத் ஒன்றியம் சிதறுண்டபோது, ''உங்களுக்கு எவ்வளவு சுயாட்சி உரிமை வேண்டுமோ, அவ்வளவையும் அனுபவியுங்கள்'' என்று சிறுபான்மை தேசிய இனங்களிடம் அதிபர் எல்ட்சின் முழங்கினார். செசன்யாவின் அன்றைய போலிக் கம்யூனிச ஆட்சிக்கு எதிராக, ஓய்வு பெற்ற ராணுவத் தளபதி துதயேவ் கலகம் செய்தபோது, அவர் தலைமையிலான கலகப்படைகளுக்கு ஆதரவும் ஆயுத உதவிகளும் செய்தார் எல்ட்சின். செசன்யா தனிக்குடியரசாகப் பிரகடனம் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து நடந்த தேர்தலில் துதயேவ் வெற்றி பெற்று செசன்யாவின் அதிபரானார்.

ஆனால் செசன்யாவின் பிரிவினையையும், துதயேவின் அதிபர் பதவியையும் எல்ட்சின் அங்கீகரிக்க மறுத்துவிட்டார். ''செசன்யா, ரஷியாவின் ஒரு சிறிய மாநிலம்தான். தனிக்குடியரசு அல்ல'' என்று கொக்கரித்த எல்ட்சின், தனது ராணுவத்தைக் குவித்து ரஷிய மேலாதிக்கத்தை நிறுவ முயன்றார். ஆனால் அன்றைய ரஷிய ஒன்றிய அதிபர் கோர்ப்பச்சேவும், ரஷிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்ததால், இந்த முயற்சி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. ஆயினும் ரஷ்யாவோ, ரஷிய ஒன்றியத்திலிருந்து பிரிந்து சென்ற நாடுகளோ செசன்யாவைத் தனிக்குடியரசாக அங்கீகரிக்கவில்லை.

ரஷ்ய மேலாதிக்கத்தை எதிர்த்து சுதந்திரத் தனிநாடு கோரி துதயேவ் தலைமையில் போராடி வந்த செசன்யா தேசியவாதிகள் கடந்த ஆண்டின் மத்தியில் ரஷ்யாவுக்குச் செல்லும் முக்கிய இருப்புப் பாதைதைய முற்றுகையிட்டு போக்குவரத்தைத் துண்டித்தனர். ஆத்திரமடைந்த எல்ட்சின் கும்பல் பொருளாதாரத் தடைகளை விதிக்கப் போவதாக எச்சரித்து, எல்லையில் படைகளைக் குவிக்கத் தொடங்கியது. ஏற்கனவே பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையிலுள்ள செசன்யாவில் இத்தகைய நடவடிக்கையால் விபரீத விளைவுகள் ஏற்படும் என்று அஞ்சிய துதயேவ், இக்குடியரசின் பாதுகாப்பு, நிதி, பொருளாதாரம், வெளியுறவு ஆகியவற்றை ரஷ்யாவின் பொறுப்பில் விடுவதாகவும், மற்ற விவகாரங்களில் தமக்கு சுயாட்சி உரிமை கோரியும் பேச்சுவார்த்தைக்கு முன்வருவதாக அறிவித்தார். சுயாட்சி அதிபர் என்ற முறையில்தான் ஒப்பந்தம் செய்து கொள்ளத் தயாராக இருப்பதாகவும் கூறினார்.



ஆனால் எல்ட்சின் கும்பல் மிகச் சாதாரணமான இந்த ஜனநாயக உரிமையைக் கூட அங்கீகரிக்க முன்வரவில்லை. அடக்கு முறையையே அவர் தீர்வாக முன்வைத்தார். இதை எதிர்த்து செசன்யா தேசியவாதிகள் ஆயுதமேந்திப் போராட்டத்தில் குதித்தனர். கடந்த டிசம்பர் மத்தியில் ரஷ்யப் படைகளைக் குவித்து செசன்யாவை முற்றுகையிட்ட எல்ட்சின், டிசம்பர் 17ந்தேதிக்குள் கிளர்ச்சியாளர்கள் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு சரணடையாவிட்டால் தாக்குதல் நடத்துவோம் என்று எச்சரித்தார். கெடு முடிந்ததும் மக்களனைவரையும் நாட்டை விட்டு வெளியேறுமாறு எச்சரித்துவிட்டு தலைநகர் குரோஸ்னியை முற்றுகையிட்டு ரஷ்ய விமானங்கள் குண்டுமழை பொழிந்தன. ரஷ்ய பீரங்கிகள் செசன்யா அதிபர் மாளிகையையும் போராளிகளின் பதுங்கு அரண்களையும் குண்டு வீசித் தாக்கின.

ரஷிய ராணுவம் நடத்திய ஏவுகணைத் தாக்குதலால் பல குடியிருப்புப் பகுதிகள் தரைமட்டமாகியது. மின்நிலையங்கள், பாலங்கள் ஒலிபரப்பு நிலையங்கள், அரசுக் கட்டிடங்கள் சேதமடைந்து தீப்பற்றி எரிந்தன. இக்கோரமான தாக்குதலில் நாலாயிரத்துக்கும் மேலான மக்கள் மாண்டு போனார்கள். ஏறத்தாழ 3 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் நாட்டைவிட்டு வெளியேறி அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

ரஷ்யாவின் நூற்றுக்கும் மேற்பட்ட டாங்கிகளும், 18,000 படைவீரர்களும் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்திய போதிலும் செசன்யா மக்கள் அஞ்சி நடுங்கிவிடவில்லை. தமது சுதந்திர லட்சியத்தைக் கைவிடவும் அவர்கள் தயாராக இல்லை. ஏற்கனவே ரஷியப் பேரரசின் கொடுங்கோல் மன்னன் ஜார் ஆட்சியை எதிர்த்துப் போராடிய பாரம்பரியமிக்க செசன்ய மக்கள், ரஷியப் படைகளைத் திரும்பப் பெறக்கோரி மனித சங்கிலிப் போராட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் தொடர்ந்து நடத்தினர். செசன்யப் போராளிகள் கொரில்லா முறையில் தாக்குதல் நடத்தி ரஷிய ராணுவத்துக்கு பெருத்த சேதத்தை விளைவித்தனர்.

தமது அதிரடித் தாக்குதலால் செசன்ய விவகாரம் ஓரிரு நாட்களில்



படிப்பகம்

www.padippakam.com

முடிவுக்கு வந்து தமது செல்வாக்கு உயரும் என்று கணக்குப் போட்ட எல்ட்சின், ஏறத்தாழ ஒரு மாத காலமாக நீடித்த போரினால் மூக்கறுபட்டுப்போனார். செசன்யப் போரை ரஷிய மக்கள் பெரிதும் ஆதரிப்பார்கள் என்று எல்ட்சின் நம்பினார். ஆனால் நவீன நாஜியாக வளர்ந்து வரும் ஜிரினோவ்ஸ்கியின் கட்சியும், தேசிய வெறியர்களான ரஷ்ய தேசிய ஒற்றுமைக் கட்சியும் தவிர வேறெந்த அரசியல் கட்சியும் இப்போரை ஆதரிக்கவில்லை. ராணுவத்தில் ஒரு பிரிவைத் தவிர மற்றவர்கள் தமது சகோதரர்களான செசன்ய மக்கள் மீது தாக்குதல் நடத்தத் துணியவில்லை. பல அதிகாரிகள் கட்டளைகளைச் செயல்படுத்தவில்லை. தளபதிகள் வெளிப்படையாகவே அதிபரையும் ராணுவ அமைச்சரையும் விமர்சித்தனர். சொந்த நாட்டு மக்கள் மீதே யுத்தம் நடத்துவது அநீதியானது என்று கண்டித்தனர். இதை விட, முன்னாள் ரஷ்ய ஒன்றியத்தின் அதிபரான கோர்பச்சேவும், ரஷ்யாவின் முன்னாள் பிரதமரும் எல்ட்சினின் கூட்டாளியுமான யோகர் கெய்தரும், பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்களும் இப்போரை எதிர்த்து கண்டனம் தெரிவித்தனர்.

நிலை குலைந்த பொருளாதாரம், வெளியுறவுக் கொள்கைகளில் பின்னடைவு, வேலையின்மை, ஊதியமின்மையால் மக்களிடையே நிலவும் வெறுப்பு, அதிகரித்து வரும் அரசு எதிர்ப்புப் போராட்டங்களால் மக்களிடமிருந்து தனிமைப்பட்டுப் போயுள்ள எல்ட்சின், செசன்யா மீதான தாக்குதலால் தனது செல்வாக்கு உயரும் என்று கனவு கண்டார். ராணுவத்தைக் கொண்டு செசன்யா மீது ரஷ்யாவின் மேலாதிக்கத்தை நிலைநாட்டி விட்டால், ரஷ்யாவின் ஒருமைப்பாட்டைக் கட்டிக் காத்த மாபெரும் தேசியவாதி என்ற செல்வாக்குடன் 1996-ல் நடைபெறவுள்ள அதிபர் தேர்தலில் சுலபமாக வெற்றிபெற்று அதிகாரத்தை மீண்டும் தக்க வைத்துக் கொள்ள முடியும் என்று கணக்கு போட்டார். ஆனால் அவரது கணக்கு பொய்த்துப் போய் செசன்ய போர் ஒரு மாதகாலமாக நீண்டு புதிய சிக்கலுக்குள் தள்ளிவிட்டுள்ளது.

எல்ட்சின் கும்பலை மட்டுமல்ல; அதன் கூட்டாளிகளான ஏகாதிபத்தியங்களின் யோக்கியதையையும் செசன்ய போர் திரைகிழித்துக் காட்டி விட்டது. 1991-ல் ரஷிய ஒன்றியம் சிதறுண்ட போது, பிரிந்து சென்ற குடியரசுகளை அவசரமாக அங்கீகரித்து, தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் ஜனநாயக வாதிகளாக அவை தம்பட்டம் அடித்துக் கொண்டன. ஆனால் இன்று எல்ட்சின் போர் வெறியை ஆதரித்து, இது ரஷ்யாவின் உள்நாட்டு விவகாரம் என்று வாய்மூடிக் கொள்கின்றன. மக்களிடமிருந்து மேலும் தனிமைப்படாமல் போரை நிறுத்தி சமரச பேச்சுவார்த்தை நடத்துமாறு உபதேசிக்கின்றன.

ரஷிய ஒன்றியம் பல குடியரசுகளாகச் சிதறுண்டதும், ரஷிய வல்லரசு செத்த பாம்பாகி விட்டது; இனி அது மீண்டெழ அடிப்படையே இல்லை என்று திரிபுவாதிகளும் போலிப் புரட்சியாளர்களும் மதிப்பிட்டனர். ரஷிய வல்லரசு பலவீனப் பட்டு போயுள்ளதே தவிர, அதன் மேலாதிக்கத் தன்மைகள் மாறிவிடவில்லை; பிரிந்து சென்ற குடியரசுகள் மீது மேலாதிக்கம் செலுத்தும் வல்லரசாகவே அது நீடிக்கிறது; இரண்டாம் உலகப் போரில் பின்னடைவுக்குள்ளான ஜெர்மனி, மீண்டும் ஒரு மேலாதிக்க வல்லரசாக வளர்ந்துள்ளதைப் போன்று, ரஷியாவும் போர்வெறி பிடித்த மேலாதிக்க வல்லரசாக பாய்வதற்கான அடிப்படைகள் நீடிக்கவே செய்கின்றன என்று நாம் ஆதாரங்களுடன் சுட்டிக் காட்டினோம். இந்த உண்மையை செசன்ய போர் மீண்டும் நிரூபித்துக் காட்டி விட்டது. ''செசன்யாவைப் போல வாலாட்ட நினைக்கும் மற்ற சிறிய மாநிங்களுக்கு இது ஒரு பாடமாக அமைய வேண்டும்; ரஷியாவிடமிருந்து மேலும் பல மாநிலங்கள் பிரிந்து செல்வதைத் தடுக்க செசன்யா மீதான போர் இன்று அவசியமாகி விட்டது'' என்று ரஷ்ய ஆட்சியாளர்கள் கொக்கரிப்பதைப் பார்த்து, ரஷிய ஒன்றியத்திலிருந்து பிரிந்து சென்ற நாடுகள் பீதியடைந்து போயுள்ளன. ரஷிய ஒன்றியத்தில் அதன் ''பெரிய அண்ணன்'' போக்கைக் கண்டு வெறுப்போடு முணுமுணுக்கின்றன.

> எல்ட்சினின் கும்பலையும் கூட்டாளிகளான ஏகாதிபத்தியங்களின் யோக்கியதையையும் செசன்ய போர் திரைகிழித்துக் காட்டிவிட்டது.

இன்னொருபுறம், செசன்யாவின் சுயாட்சி உரிமைப் போருக்குத் தலைமை தாங்கி வழிநடத்தும் முன்னாள் ராணுவத் தளபதி துதயேவ், நியாயமான இப்போராட்டத்தை இஸ்லாமிய மத அடிப்படையிலான போராட்டமாக சீரழித்து வருகிறார். ரஷிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக 'ஜிகாத்' (புனிதப் போர்) நடத்துவோம்; உலகெங்குமுள்ள முஸ்லீம் முஜாகிதீன்கள் காகசஸ்மலைக்கு வரவேண்டும். செசன்யாவின் புனிதப்போரை வெற்றியடையச் செய்ய வேண்டும்'' என்று அறை கூவுகிறார். சில இஸ்லாமிய நாடுகள் ரஷியாவின் போர் தாக்குதலைக் கண்டித்திருப்பதோடு, அந்நாடுகளில் ரஷிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் நடந்துள்ளன. இப்படி போஸ்னியா பாணியில், மதவாத அடிப்படையில்பிரச்சினையை இழுத்துச் செல்வது செசன்ய மக்களுக்கு ஒருபோதும் விடுதலையைப் பெற்றுத் தராது.



செசன்யாவில் குண்டு வீச்சுத் தாக்குதலில் கொல்லப் பட்டவர்களை உறவினர்கள் தூக்கிச் செல்லும் அவலம்

அதேசமயம், எல்ட்சின் கும்ப லும் தற்போதைய எதிர்ப்புகளைக் கண்டு செசன்யா மீதான போரை நிறுத்தி சுயாட்சி உரிமையை வழங் கிவிடாது. போர் நிறுத்த உடன் பாட்டை கிடப்பில் போட்டுவிட்டு மீண்டும் அது தாக்குதலை தீவிரப்ப டுத்தி வருகிறது. செசன்ய போர்ச் சிக்கலைக் காரணம் காட்டி, நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து ஏற்பட் டுள்ளதாக கூப்பாடு போட்டு, பிரிவி னைவாத - இஸ்லாமிய பயங்கர வாத அபாயம் பெருகிவிட்டதாகப் பீதி யூட்டி, நாடு முழுவதும் நெருக்கடி நிலையை அறிவித்து, செசன்ய மக்க ளோடு ரஷிய மக்களின் உரிமையையும் எல்ட்சின் கும்பல் அடக்கவே செய்யும். நெருக்கடி நிலையைச் சாதகமாக்கிக் கொண்டு, அதிபர் தேர்தலை ரத்து செய்து விட்டு அதிகாரங்களைக் குவித்துக் கொண்டு மேலும் ஐந்தாண்டுகளுக்கு பத வியில் நீடிக்கவே அது முயற்சிக்கும். சுருக்கமாகச் சொன்னால், எல்ட்சின் கும் பல் பாசிச சர்வாதிகாரத்தை நோக்கி நாலு கால் பாய்ச்சலில் முன்னேறிக் கொண்டி ருக்கிறது. போர்வெறிக்கு எதிரான ரஷ் யப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டங்களும், செசன்ய மக்களின் சுயாட்சி உரிமைக்கான போராட்டங் களும்தான் எல்ட்சின் கும்பலின் தேசிய வெறி இனவெறி பிடித்த பாசிச சர்வாதி காரத்தை முடிவுக்குக் கொண்டு வரும். ரஷிய மக்களுக்கு ஜனநாயகத்தையும் செசன்யாவுக்கு சுயாட்சி உரிமையையும் அதுவொன்றேசாதிக்கும்.

● குமா



படிப்பகம்

www.padippakam.com

## அரசு பயங்கரவாதத்துக்கு எதிராக புரட்சியாளர்கள் போராட்டம்

ஆந்திராவில் கடந்த டிசம்பர் 25-ந் தேதியிலிருந்து சிறையில் வாடும் நக்சல்பாரி புரட்சியாளர்கள் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடக்கியுள்ளனர். நக்சல்பாரிகளின் மக்கள் யுத்தக் குழு மீதான தடையை நீக்க வேண்டும்; புரட்சியாளர்கள் மீதும் சிறுபான்மை முஸ்லிம்கள் மீதும் ஏவப்படும் "தடா" சட்டத்தை ரத்து செய்ய வேண்டும்; போலீசுடன் மோதல் என்ற பெயரில் நடக்கும் அரசு பயங்கரவாதக் கொலைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் முதலான கோரிக்கைகளை முன்வைத்து ஆந்திராவின் 6 மத்திய சிறைகளில் 90-க்கும் மேற்பட்ட புரட்சியாளர்கள் தொடங்கிய இப்போராட்டம், இப்போது, "தடா"வில் கைதாகியுள்ள அப்பாவி முஸ்லிம்களும் சேர்ந்து கொள்ள 200-க்கும் மேற்பட்டோர் பங்கேற்கும் மிகப்பெரிய போராட்டமாக வளர்ந்துள்ளது.



நக்சல்பாரி புரட்சியாளர்கள் சிறையில் நடத்தும் போராட்டத்தை ஆதரித்து ஆந்திர சிவில் உரிமைக் கழகத்தினரும் – புரட்சிகர கலைஞர்களும் நடத்தும் ஆர்ப்பாட்டம்.

ஆந்திராவில் சட்டமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டதும், நக்சல்பாரி புரட்சியாளர்கள் இப்போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிக்கக் கோரி பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டனர். இதற்கு எதிராக போலீசாரே ஒரு அரசியல் கட்சியாக நின்று எதிர்ப்பிரச்சாரம் செய்தனர். தேடுதல் வேட்டை என்ற பெயரில் அப்பாவி மக்களைப் பிடித்து சித்திரவதை செய்து மிரட்டி, அவர்களது விருப்பத்துக்கு மாறாக ஓட்டுப் போட இழுத்து வந்தனர். தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரம் செய்ததற்காக, கடந்த செப்டம்பர் 5-ம் நாளன்று வாரங்கல் மாவட்டம் நார்மெட்டா கிராமத்தில் போலீசுடன் மோதல் என்ற பெயரில் இரு புரட்சியாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். முற்போக்கு மாணவர் சங்கத்தின் ஐதராபாத் நகர அமைப்பாளர் சந்திரசேகர் செப்.6-ஆம் நாளன்று போலீசாரால் மிருகத்தனமாக சித்திரவதை செய்யப்பட்டு, உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி உயிரோடு கொளுத்தப்பட்டார். இதை தற்கொலை என்று போலீசு கதை கட்டியது. மக்கள் யுத்தக் குழுவின் பிராந்தியக் கமிட்டி செயலாளரான சூர்யம் மற்றும் அவரது மனைவி லட்சுமி ஆகியோர் செப்.28 அன்று நெல்லூரில் போலீசாரால் கைது செய்யப்பட்டு, சித்திரவதை செய்து கொல்லப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, கரீம் நகர் மாவட்டத்தில் நக்சலைட் வேட்டை என்ற பெயரில் அனுப்பப்பட்ட பஞ்சாப் அதிரடிப்படையினர் நடத்திய அடக்குமுறை வெறியாட்டத்தால், அம்மாவட்டத்தின் அன்றாட வாழ்க்கையே நிலை குலைந்து போனது. அடக்குமுறையின் உச்சகட்டமாக அதிரடிப்படையினர் 7 பேர் ஒரு தலித் பெண்ணை கும்பலாகக் கற்பழித்த கொடுமையும் நடந்தது.

இதுதவிர, மக்கள் யுத்தக் குழுவினர் ஆயிரக்கணக்கான செயல் வீரர்கள் பல ஆண்டுகளாக சிறையில் வதைபடுகின்றனர். 1200 பேர் மீது தடா சட்டம் ஏவப்பட்டுள்ளது. 1991-லிருந்து '94க்குள் ஏறத்தாழ 500 பேர் போலீசுடன் மோதல் என்ற பெயரில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். எனவேதான் பெருகி வரும் அரசு பயங்கரவாத அடக்கு முறையை எதிர்த்து சிறையில் வாடும் புரட்சியாளர்கள் போராட்டத்தில் குதித்தனர்.

ஆட்சிக்கு வந்துள்ள புதுமாப்பிள்ளை என்.டி.ஆர்., வன்முறையை கைவிடுங்கள்; சரணடையுங்கள் என்று வழக்கம் போலவே உபதேசித்தார். ஆனால், போராட்டம் உறுதியுடன் முன்னேறத் தொடங்கியதும் பஞ்சாப் அதிரடிப்படையை திரும்பப் பெறுவதாகவும், காங்கிரசு ஆட்சியில் நடந்த போலி மோதல் கொலைகளைப் பற்றி விசாரணை நடத்துவதாகவும் உள்துறை அமைச்சர் இந்திரா ரெட்டி பசப்பினார். இந்த வெற்று வாக்குறுதியைக் கூட சகித்துக் கொள்ளாமல் ஆந்திர போலீசு அதிகாரிகள் சங்கம் கடும் எதிர்ப்பு தெரிவித்தது. நக்சல்பாரிகளை ஒடுக்கி கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ள நிலையில், தடையை நீக்குவதோ, மோதல் பற்றி விசாரணை நடத்துவதோ நக்சல்பாரிகளுக்குச் சாதகமாகிவிடும் என்று என்.டி.ஆர். அரசை எச்சரித்துள்ளது.

ஆந்திராவில் தேர்தல் வரலாம்; ஆட்சிகள் மாறலாம்; ஆனால் அரசு பயங்கரவாத முறையில் பயிற்றுவிக்கப்பட்ட போலீசு கும்பலின் தன்மை ஒரு போதும் மாறிவிடாது. மனித உரிமைகளற்ற அடக்குமுறை போலீசு ராஜ்ஜியமும் மாறாது என்பதையே இவை சுட்டிக்காட்டுகின்றன.

## தரகு முதலாளிகளின் பாக்கெட்டில் போலி கம்யூனிஸ்டுகள்

"தொழிலாளர்கள் மத்தியில் ஒழுங்கீனம் நிலவுவதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது; விதிமுறைகளுக்குப் பணிந்து நடக்கவில்லை என்றால் அவர்கள் வெளியேற்றபட வேண்டும்; தொழிலாளர்கள் பணிக் கலாச்சாரத்தை அழித்தால் நான் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க மாட்டேன்" - இப்படித் தொழிலாளர்கள் மீது எரிச்சலும் ஆத்திரமும் கொண்டு கொக்கரிப்பவர் ஆளும் வர்க்கக் கட்சியைச் சேர்ந்தவரல்ல. பாட்டாளி வர்க்கத்தின் தோழனாக மார்தட்டிக் கொள்ளும் மே.வங்க 'மார்க்சிஸ்டு' முதல்வர் ஜோதிபாசுதான்.

மே.வங்கத்தின் தலைநகரான கல்கத்தாவில் அண்மையில் இந்திய தொழிற்சாலை சம்மேளனத்தின் நூற்றாண்டு விழா (CII) கொண்டாடப்பட்டது. இந்திய தரகுப் பெருமுதலாளிகளும் பன்னாட்டு தொழிற்கழகங்களின் பிரதிநிதிகளும், ஏகாதிபத்திய நாடுகளின் அரசுப் பிரதிநிதிகளும் இவ்விழாவில் பங்கேற்றனர். இதில் அமெரிக்கத் தொழில் நிறுவன ஆலோசனைக் குழுவைச் சேர்ந்த ஆர்தர் லிட்டில் மே.வங்கத்தில் தொழில் அமைதி இல்லை; பணிக் கலாச்சாரம் இல்லை. தொழில் வளர்ச்சியின்மைக்கு இதுவே காரணம் என்று குறிப்பிட்டிருந்தார்.



படிப்பகம்

www.padippakam.com


இதே நேரத்தில் கல்கத்தா மாநகராட்சி ஊழியர்கள் நான்கு பேருக்கு ஆணையர் விளக்கம் கோரும் நோட்டீசு அனுப்பினார். இதை எதிர்த்து காலவரையறையற்ற போராட்டம் நடத்துவதாக 'மார்க்சிஸ்ட்' கட்சியின் தலைமையிலான தொழிற்சங்கம் அறிவித்தது. எனவே அமெரிக்கத் தொழில் நிறுவன ஆலோசனைக் குழுவின் அறிக்கையால் எரிச்சலடைந்த 'மார்க்சிஸ்டு' முதல்வர் ஜோதிபாசு, தொழிற்சங்கத்தினரின் போராட்ட எச்சரிக்கையைக் கண்டு ஆத்திரமடைந்தார். அதனால் "மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்காக இந்த அரசு பாடுபட்டு வரும் நேரத்தில், தொழிலாளர்கள் ஆலை விதிமுறைகளுக்குப் பணிந்து நடக்க வேண்டும். இத்தகைய கட்டுப்பாடுகளால் ஓட்டுக்களை இழக்க நேரிட்டாலும், அதைப்பற்றி நான் கவலைப்பட மாட்டேன்; இதனால் என்ன நடந்தாலும் சரி" என்று இந்திய, அந்நிய பெருமுதலாளிகளின் நலனுக்காகக் கொக்கரிக்கிறார் பாசு.

அன்னிய மூலதன ஆதிக்கத்துக்குக் கதவை அகலத் திறந்துவிடும் ராவ் அரசின் கொள்கைகளை எதிர்ப்பதாகச் சவடால் அடிக்கும் 'மார்க்சிஸ்டு'களின் புதிய பொருளாதாரக் கொள்கைதான் என்ன? ஒரு வெங்காயமும் கிடையாது. ராவ் அரசின் அதே கொள்கையைத்தான் சிவப்புச் சாயம் பூசி போலிகள் கடை விரிக்கின்றனர். அந்நிய மூலதனத்தால் மாநிலத்தின் தொழில் வளர்ச்சி பெருகும் என்று காங்கிரசு துரோகிகளைப் போல காதில் பூச்சுற்றுகின்றனர்.

## கராச்சி கலவரம்:
## இந்தியா மீது பெனசிர் பாய்ச்சல்

பாகிஸ்தானின் முக்கிய வர்த்தக நகரமான கராச்சி, கடந்த இரு மாதங்களாகத் தொடரும் இனப் போராட்டங்களாலும் ராணுவத்தின் அடக்குமுறையாலும் நிலைகுலைந்து பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. கராச்சியில் வன்முறையைத் தூண்டி வருவதாகக் குற்றம்சாட்டி இந்தியத் தூதரகத்தை மூடுமாறு பாகிஸ்தான் ஆணையிட்டுள்ளது. இதுதவிர, காஷ்மீரில் இந்தியா தொடர்ந்து அடக்குமுறையை ஏவுவது தொடருமானால், இந்தியா - பாகிஸ்தான் இடையே நான்காவது போர் மூளும் என்று பாக். பிரதமர் பெனசிர் புட்டோ எச்சரித்துள்ளார்.

1947-இல் இந்திய - பாக் பிரிவினையின் போது, இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கு குடிபெயர்ந்த முஸ்லீம்கள் "முகாஜிர்" என்றழைக்கப்படுகின்றனர். இவர்கள் சிந்து மாகாணத்திலும் கராச்சி நகரிலும் பெரும்பான்மையாக உள்ளனர். ஆனாலும் இம்மக்கள் இன்றுவரை இரண்டாந்தர குடிமக்களாகவே நடத்தப்படுகின்றனர். சிந்து மாகாண சட்டசபையிலும், பாக். நாடாளுமன்றத்திலும் கராச்சி உள்ளாட்சி அமைப்புகளிலும் இம்மக்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் தரப்படுவதில்லை. கல்வி, வேலை வாய்ப்பு, தொழில் உரிமைகளும் மறுக்கப்பட்டு இவர்கள் பாக். அரசால் தொடர்ந்து ஒடுக்கப்பட்டு வருகின்றனர். இதனால் "முகாஜிர் குவாமி இயக்கம்" என்ற அமைப்பின் கீழ் இவர்கள் தமது உரிமைக்காகப் போராடி வருகின்றனர். பெனாசிர் அரசு, ராணுவத்தை ஏவி முகாஜிர்களை நரவேட்டையாடி வருகிறது.

முகாஜிர்களின் போராட்டம் வெற்றி பெற்றால், தாம் சிறுபான்மையினராகி விடுவோம் என்ற அச்சம் காரணமாக சிந்தி இன மக்கள் முகாஜிர்களை எதிர்க்கின்றனர். குறிப்பாக பிரதமர் பெனசிர் தனது ஓட்டு வங்கியை இழந்துவிடாதிருக்க சிந்தி மக்களை முகாஜிர்களுக்கு எதிராகத் தூண்டி விடுகிறார். இது தவிர, முகாஜிர் இயக்கம் லண்டனிலுள்ள அல்டாப் ஹுசைன் தலைமையிலான குழுவாகவும், சமரவாதியான ஹாகிகி தலைமையிலான குழுவாகவும் பிளவுபட்டு மோதிக் கொண்டிருக்கிறது. இதுவன்றி முஸ்லீம்களின் ஷியா, சன்னி பிரிவுகளுக்கிடையேயும் மோதல் நடக்கிறது. போதை மருந்து கடத்தல் இப்பிராந்தியத்தில் கொடிகட்டிப் பறப்பதால், எல்லாக் குழுக்களும் ஏ.கே. 47 ரக துப்பாக்கிகளுடன்தான் திரிகின்றன. தெருக்களிலும், ஏன் மசூதிகளிலும் நடக்கும் துப்பாக்கிச் சண்டையால் நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் தினமும் பலியாகி வருகின்றனர்.



கராச்சியில் இராணுவ அடக்குமுறைக்கு எதிராக முகாஜிர் இயக்கத்தினர் நடத்தும் ஆர்ப்பாட்டம் பேரணி.

கராச்சியில் தொடரும் உள்நாட்டுப் போரினால் பெனசிர் அரசு தனது கட்டுப்பாட்டையும் ஆதரவையும் இழந்து வருகிறது. அதிகாரப் பசி கொண்ட ராணுவம் தனது அடக்குமுறையாலும், ரகசிய சதிகளாலும் கலவரத்தைத் தூண்டி, எரியும் தீயில் எண்ணெயை ஊற்றி, மயிரிழைப் பெரும்பான்மையில் நிற்கும் பெனசிர் அரசைக் கவிழ்க்க முயற்சிக்கிறது. போதாக் குறைக்கு, இந்திய உளவு நிறுவனமான "ரா" ரகசிய ஏஜெண்டுகள் மூலம் பகைமை வெறியோடு தன் பங்குக்குக் கலவரத்தைத் தூண்டி வருகிறது.

நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் பெனசிர் அரசு, மக்களைத் திசை திருப்பும் நோக்கத்துடன் மீண்டும் இந்திய எதிர்ப்பு லாவணியை ஆரம்பித்துள்ளது. இந்தியத் தூதரக அதிகாரி தீபக் தாக்கூரை வெளியேற்றியதைத் தொடர்ந்து, கராச்சி தூதரகத்தை மூடுமாறு அது உத்திரவிட்டுள்ளது. பம்பாயில் பாகிஸ்தான் தூதரகம் செயல்பட ஜின்னா மாளிகையை இந்திய அரசு தராமலிருப்பது, காஷ்மீர் விவகாரத்தில் எதிர்பார்த்த விளைவுகள் கிட்டாததால் ஏற்பட்டுள்ள விரக்தி, கராச்சியில் பற்றி எரியும் இனக்கலவரம் முதலானவையே பாகிஸ்தானின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளுக்கு, அடிப்படையாக உள்ளது. இதேபோல, ஊழல் கோஷ்டிச் சண்டையால் நிலைகுலைந்து மக்களிடம் அம்பலப்பட்டு நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் ராவ் அரசு, இதிலிருந்து தப்பிக்க பாகிஸ்தானின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை பூதகரமாக்கி பூச்சாண்டி காட்டுகிறது.


படிப்பகம்

www.padippakam.com

## சமூக விரோதிகளுக்கு எதிரான போராட்டம்

சுமார் 14 வருடங்களாக சேந்தமங்கலம் சமூக விரோதிகளின் கோட்டையாக உள்ளது. அதுவும் வார்டு 1-ல் தாழ்த்தப்பட்ட சமூகத்தில் இருக்கும் இச்சிறு சமூக விரோத கும்பலால் அந்த வார்டு மக்களுக்கே ஒரு அவமானப்பெயர் நிலவி வருகிறது. கொலை, கொள்ளை, பாலியல் பலாத்காரங்களை இரவில் ஒதுக்குப் புறங்களில் செய்து வந்த இக்கும்பல், இப்போது பகலில் நகரின் முக்கியப் பகுதிகளிலேயே தமது கைவரிசையைக் காட்டுகிறது. அரசியல்வாதிகள், போலீசு உதவியுடன் வளர்ந்து வந்த இக்கும்பல் பாசிச ஜெயா ஆட்சியில் புது தெம்போடு ஆட்டம் போடுகிறது. டிசம்பர் மாதத்திற்குள் பல சம்பவங்கள் நடந்தன. 25.12.94 அன்று சந்தைக்குச் சென்ற பெண்களைச் சீண்டி, பலவந்தப்படுத்தி செய்த கொடுமை தாளாமல் அவர்கள் பகுதியிலுள்ள புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி அமைப்பிடம் முறையிட்டனர்.

சமூக விரோதிகளின், போலீசின், அரசியல்வாதிகளின் கூட்டை அம்பலப்படுத்தி, இதற்கு எதிராக மக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி பு.மா.இ.மு. பிரசுரம் விநியோகித்தது. மக்களின் கருத்தறிய 30.12.94 அன்று அரங்கக் கூட்டம் ஒன்றும் ஏற்பாடு செய்தது. பச்சுடையாம்பட்டி புதூரில் உள்ள அனைத்து விசைத்தறி தொழிலாளர்களும், சுற்று பகுதியிலுள்ள கடை வியாபாரிகளும், பொதுமக்களும் தமது அலுவல்களை நிறுத்திவிட்டு அரங்கக் கூட்டத்திற்கு திரண்டனர். ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டதைக் கண்டு பீதியடைந்த போலீசு, முன்னறிவிப்பு இல்லாமல் தடியடி நடத்தி கூட்டத்தைக் கலைத்தது. கையில் சிக்கிய மூவரைக் கைது செய்து கொண்டு போனது. கூட்டத்திற்கு மக்கள் செல்லாதபடி பீதி ஏற்படுத்த போலீசு அராஜகமாக நடந்து கொண்டதையும் மீறி பு.மா.இ.மு.வினர் 100-க்கும் மேற்பட்ட மக்களைத் திரட்டிக் கொண்டு வந்தனர். போலீசு, முன்னணியாளர்களை மிரட்டிப் பார்த்து பயனில்லாமல் பின் வாங்கியது. அரங்கக் கூட்டம் நடத்தி மக்களின் கருத்து கேட்டுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. போலீசு உயர் அதிகாரிகளுக்கு கைது செய்தவர்களைக் விடுவிக்கக் கோரி தந்தி அடிக்கப்பட்டது. போலீசு, கைது செய்தவர்களை மிரட்டி நபருக்கு 350 ரூபாயை பறித்துக் கொண்டு விடுவித்தது. பிறகு போலீசின் அராஜகத்தைக் கண்டித்து பிரசுரம் விநியோகிக்கப்பட்டது. சமூக விரோதிகள் தாழ்த்தப்பட்டவர்கள் என்பதாலும் பாதிக்கப்படுபவர்கள் வன்னியர் போன்ற பிற சாதியினர் என்பதாலும் இதை சாதிய மோதலாக சமூக விரோதிகளும், போலீசு சித்தரிக்க முயல்கின்றன. பு.மா.இ.மு-வை தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிரான அமைப்பாகவும் அவதூறு பரப்பி வருகிறார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் மீதான கொடுமைகள், அடக்குமுறைகளுக்கு எதிராக பு.மா.இ.மு.-வும் அதன் தோழமை அமைப்புகளும் மேற்கொண்ட இயக்கங்களைச் சுட்டிக்காட்டி, போராட்டம் திசை திருப்பப்படுவதற்கு எதிராகப் போராடி வருகிறது, பு.மா.இ.மு. உழைக்கும் மக்கள் சமூக விரோதிகளை சாதி, சொந்தம் என்று பாராமல் புறக்கணித்தும் எதிரான நடவடிக்கைக்கும் கட்சி வேறுபாடின்றி திரளுமாறு அறைகூவி அழைத்து பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறது.



## குடிநீர் கேட்டு மறியல் அதிகார வர்க்கம் பணிந்தது

மதுரை - லோயர்கேம்ப் பகுதி பெரியாறு பக்கமாக இருந்தும் தண்ணீர் வசதியில்லை. தண்ணீர் தொட்டி கட்டிய அரசாங்கம் மோட்டார் போட்டு வசதி செய்து தர பணமில்லையென சாக்கு சொல்லி வருகிறது. ஆனை வாங்கிய முட்டாளுக்கு அங்குசம் வாங்கத் தெரியலையாம். மேலும் தண்ணீர் எடுக்க முடியாதபடி ஆற்று பாதையையும் அடைத்துவிட்டார்கள். இதற்கு எதிராக இப்பகுதி விவசாயிகள் விடுதலை முன்னணி மனு, ஆர்ப்பாட்டம் என்ற முறையில் போராடியும் பயனில்லை. எனவே 25.12.94 அன்று 250-க்கும் மேற்பட்ட மக்களைத் திரட்டி சாலை மறியல் செய்தனர். வட்டாட்சியாளர் மற்றும் போலீசு அதிகாரிகள் வந்து போராட்டத்தைக் கைவிடும்படி கூறினர். போராட்டக் கமிட்டி தோழர். பாண்டி, கோரிக்கையை அதிகாரிகளிடம் கூறி நடவடிக்கை எடுப்பதாக எழுதித் தரவேண்டும் என்றார். வாய்மூலம் உறுதி தருகிறோம் என்று அதிகாரிகள் கூறியதை ஏற்காமல் போராட்டக் கமிட்டியும் மக்களும் மறியலை உறுதியுடன் தொடர்ந்தனர். சரியாக 1.30 மணி நேரம் குமுளி சாலையில் போக்குவரத்து பாதித்து 100-க்கும் மேற்பட்ட பேருந்துகள் நின்றன. வேறு வழியில்லாமல் அதிகாரி அதே இடத்தில் குழாய்கள் போடுகிறேன் என்றும் அதிக நேரம் தண்ணீர் விடுகிறேன் என்றும் எழுதித் தந்தார். குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து தரப்படவில்லையானால் அடுத்து அறிவிக்காமலேயே போராட்டம் நடத்துவோம் என்று எச்சரித்துவிட்டு போராடிய மக்கள் கலைந்து சென்றனர்.

## ரவுடி 'மார்க்சிஸ்டு'களுக்கு எதிராக போராட்டம்

விழுப்புரம் ராமசாமி படையாச்சியார் மாவட்ட சி.பி.ஐ.(எம்)-ன் மாநாடும், பொதுக்கூட்டமும், பேரணியும் 26.12.94 முதல் மூன்று நாட்கள் நடைபெற்றன. சி.பி.ஐ.(எம்)-ன் தலைமையை அம்பலப்படுத்தியும் கட்சியின் ஜனநாயக சக்திகளாக உள்ள அணிகளின் சிந்தனைக்கு சில கேள்விகளை முன்வைத்தும் விழுப்புரம் பகுதி புதிய ஜனநாயகம் வாசகர் வட்டம் பிரசுரம் வெளியிட்டது. 27-ந் தேதி பிரதிநிதிகள் மாநாட்டுக்கு வெளியே சாலையில் பிரசுரம் விநியோகித்துக் கொண்டிருந்தவர்களை, சி.பி.எம். தலைமையால் ஏவப்பட்ட கும்பல் ஒன்று வந்து தடுத்து பிரசுரங்களை பறித்துச் சென்றது. கொச்சையாக - அசிங்கமாகப் பேசியும் நடந்தும் கொண்ட அக்காலி கும்பலிடம் வாசகர் வட்டத்தினர் அரசியல் நாகரிகத்துடனே நடந்து கொண்டனர். 28-ந் தேதி பொதுக்கூட்டம் நடந்த பகுதியில் பிரசுரம் விநியோகித்துக் கொண்டிருந்தவர்களை ஒரு காலிக் கும்பல் வந்த தடுத்துத் தாக்கியது. பிரசுரங்களை பறித்துக் கிழித்துப் போட்டது. பொதுமக்களில் சிலர் வாசகர் வட்டத் தோழர்களுக்கு ஆதரவாக வந்து விலக்கி விட்டனர்.

மறுநாள் விழுப்புரம் முழுவதும் சி.பி.எம்-ன் ரவுடித்தனத்தை அம்பலப்படுத்தி சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. இது சி.பி.எம். அணிகளிடையே விவாதத்தைத் தூண்டியது. பொதுமக்களிடையே போலிகளின் உண்மை முகத்தைத் தோலுரித்துக் காட்டியது.


படிப்பகம்

www.padippakam.com

# ''டான்செம்'' தனியாருக்கு தாரை போர்க்குணமிக்க போராட்டம் தேவை

மாயனூர் ஆஸ்பெஸ்டாஸ் (பைப்ஸ்) தொழிற்சாலையில் அதிகாரிகளின் ஊழல் சீழ்பிடித்து நாறுகிறது. துணைப் பொதுமேலாளராக இருந்த ராகவன் செய்த தில்லுமுல்லுகளும் அடித்த கொள்ளையும் ஏராளம். ஆலைக்குரிய தண்ணீருக்காக காவிரியில் இருந்து கொண்டு வந்து கொட்டுவதற்கு ''காண்டிராக்ட்'' விட்டு கொள்ளையடித்தார். ஆலையில் இரண்டு ஆழ்குழாய்கள், ஆற்றுபடுகை நீரேற்றும் நிலையம் இருந்தும் ''காண்டிராக்ட்'' விட்டார். இப்படி பல ''காண்டிராக்ட்'' கொள்ளையில் தனது சாதிக்காரர்களுக்கு மட்டுமே (இவர் தாழ்த்தப்பட்டவர்) சலுகை காட்டினார். பிற சாதிக்காரர்களை திட்டமிட்டே புறக்கணித்து வந்தார். இதனால் பாதிக்கப்பட்ட பிற சாதிக்காரர்கள் இவரை எதிர்த்து செயல்பட்டனர்.

தமது 'வருமானம்' பாதிக்கப்பட்டதால் அசைன் (உதவி மேலாளர்), எபினேசர் பொன்ராஜ் (தொழில்நுட்ப மேலாளர்), பாலசுந்தரம் (பொருளாதார கட்டுப்பாட்டு மேலாளர்) ஆகியோர் கடுமையாக எதிர்த்தனர். பகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட இளைஞர்களைத் தூண்டிவிட்டு இவர்களை மிரட்டச் செய்தார், ராகவன். இதனால் தொழிற்சங்கப் பொறுப்பாளர்கள் ராகவனை மாற்ற வேண்டும் என போர்க்கொடி தூக்கினார். மேலதிகாரிகளுக்கும் அமைச்சர் எம். சின்னசாமிக்கும் முறையிட்டு அழுத்தம் கொடுத்து வேலை செய்தனர். தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் ராகவனை மாற்றக் கூடாது என கையெழுத்து வாங்கி மேலதிகாரிகளுக்கு அனுப்பினர். ''சமுதாய நல்லிணக்கத் தொழிலாளர்கள்'' என்ற பெயரில் 8 தொழிலாளர்கள் ராகவனுக்கு ஆதரவாக உண்ணாவிரதமிருந்தனர். ஆனால் ராகவன் விருத்தாசலம் பீங்கான் தொழிற்சாலைக்கு மாற்றப்பட்டதோடு இவருக்கு ஆதரவாக செயல்பட்ட தொழிலாளர்களில் 9 பேருக்கு குற்றப்பத்திரிக்கை கொடுத்தும் 3 பேரை வேலை நீக்கமும் செய்துள்ளது நிர்வாகம்.

ராகவன் மாயனூர் ஆலைக்கு வந்த பின்தான் இதுபோன்ற சாதி மோதல்கள் அதிகாரிகள், தொழிலாளர்கள் மத்தியில் உருவானது. ஓட்டுக்கட்சி தொழிற்சங்கத் தலைமைகளும் இதை முறியடித்து செயல்படாமல் உடந்தையாகவே இருந்தன. தொழிலாளர்களின் நலன் அடிப்படையிலான கோரிக்கைகளை வைக்காமல் இதுபோன்ற மோதல்களுக்கு நடந்த போராட்டங்கள் தொழிலாளர்களால் புறக்கணிக்கப்பட்டு தனிமைப்பட்டன.

டான்செம் (TANCEM) நிறுவனத்தின் கீழுள்ள ஐந்து ஆலைகளையும் தனியாருக்குத் தாரைவார்க்க இருக்கிறது, தமிழக அரசு. அரியலூரிலும் ஆலங்குலத்திலும் இருக்கும் ஆலைகளோ நல்ல லாபம் ஈட்டக்கூடியவை. பிற மூன்றும் நட்டக் கணக்கு காட்டப்படுகின்றனவே ஒழிய உண்மையில் லாபம் ஈட்டி வருகின்றன. அதிகார வர்க்கக் கும்பலின் தில்லுமுல்லுகள், ஊழல்களால்தான் திவாலாகிக் கொண்டிருக்கின்றன. டான்செம் நிர்வாகத்தின் கீழுள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வாழ்க்கை பறிக்கப்பட்டு வீதியில் நிறுத்தப்படுகிற அபாயம் பல மாதங்களாக இருந்து கடைசி நேரத்தில்தான் ஓட்டுக்கட்சி தொழிற்சங்கங்கள் அக்கறை செலுத்துகின்றன.

இருப்பினும் போர்க்குணமிக்கப் போராட்டமும் புரட்சிகர தொழிற்சங்கமும் இல்லாமல் தனியார்மயமாக்கல் அபாயத்தைத் தடுக்க முடியாது.

# விசைத்தறி தொழிலாளர்களுக்கு போராடும் புரட்சிகர சங்கம்

பள்ளிப்பாளையத்தில் புரட்சிகர விசைத்தறி தொழிலாளர் சங்கத்தின் (RPLU) கிளைகள் தொடக்க விழாவும் பொதுக்கூட்டமும் 2.12.94 அன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு ஆவாரங்காடு கிளை துணைச் செயலாளர் அருண் குமார் முன்னிலையில் கிளைச் செயலாளர் ஜெயராம் தலைமை தாங்கினார். புதன்சந்தை கிளைச் செயலாளர் ராமன் இளைஞர்களுடைய சீரழிவுக்கு அரசே பொறுப்பு என்பதைப் பற்றி பேசினார். பு.வி.தொ.ச. பொதுச் செயலாளர் தர்மராஜ் கிளைகளைத் தொடங்கி வைத்து பொறுப்பாளர்களை அறிவித்து தொழிலாளர் நலச் சட்டங்களும் இன்றைய நடைமுறையையும் பற்றி உரையாற்றினார். சிறப்புரையாளராக பாரத மிகுமின் நிறுவனத்தின் பைப்பிங் செண்டர் ஸ்டாப் யூனியன் பொதுச் செயலாளர் தங்கராசு, பிற தொழிற்சங்கங்களின் அவலநிலையையும் புரட்சிகர தொழிற்சங்கம் செயல்பட வேண்டிய முறையையும் விளக்கிப் பேசினார். இக்கூட்டத்தில் பு.வி.தொ.ச.வின் சட்ட ஆலோசகர், வழக்கறிஞர் பூபாலக்கண்ணன் பார்வையாளராகக் கலந்து கொண்டார். 100-க்கும் மேற்பட்ட மக்கள் கூடி நின்று கேட்டு ஆதரித்தனர். புதன்கிழமை சந்தை கிளையின் துணைச் செயலாளர் மோகன சுந்தரம் நன்றி கூறினார்.

பு.வி.தொ.ச தொழிலாளர்களுக்காக இரு பிரச்சினைகளில் தலையிட்டு வெற்றியீட்டியும் கொடுத்துள்ளது. ராஜவீதியில் மாதேஸ் என்ற முதலாளியிடம் வேலை செய்து வந்த ராஜா என்பவர் தீபாவளி போனஸ் கொடுப்பதற்காக திணித்த கூடுதல் வேலையை எதிர்த்துக் கேட்டுள்ளார். இதற்காக தீபாவளிக்கு 15 நாட்களுக்கு முன்பாக ராஜாவை வேலையிலிருந்து நிறுத்திவிட்டு போனஸ் தர மறுத்தார் மாதேஸ் முதலாளி. தீபாவளி முடிந்த 12-ந் தேதி பணம் கேட்ட ராஜாவை முதலாளியின் மகன் தாக்க முற்பட்டுள்ளார். அன்று இரவும் தாக்க ராஜாவைத் தேடியலைந்தது முதலாளியின் ஏவல் கும்பல். அதிகாலையில் தூங்கிக் கொண்டிருந்தவரை எழுப்பித் தாக்கியது. ராஜா கொடுத்த புகார் மனுவை போலீசு வாங்க மறுத்து விட்டது. இதில் தலையிட்ட பு.வி.தொ.ச. போலீசு நிலையத்தில் விளக்கம் கேட்ட போது எஸ்.ஐ. தங்கராசு முறையாக பதில் தராமல் அவமானப்படுத்தினார். இதனால் பு.வி.தொ.ச. சுவரொட்டி ஒட்டி அம்பலப்படுத்தியது. அரண்டு போன எஸ்.ஐ., பு.வி.தொ.ச. சட்ட அலோசகரிடம் வந்து உரிய நடவடிக்கை எடுக்கிறேன் என்று கூறினார். மாதேஸ் முதலாளியையும் அவருடைய கையாட்களையும் கைது செய்து வழக்கு போட்டு அபராதம் கட்ட வைத்தார். முதலாளியிடம் எட்டுமாதம் வேலை செய்த ராஜாவிற்கு போனஸ் தொகையாக ரூ. 600 பெறப்பட்டது.

அக்ரகாரத்தில் ரமேஸ் என்ற முதலாளி சோமு என்கிற விசைத்தறி தொழிலாளி 2 நாள் விடுப்பு எடுத்ததற்காக அடித்துள்ளார், சங்கத்திடம் முறையிட்ட பிறகு பு.வி.தொ.ச. சார்பாக 15 பேர் சென்று பேசி தொழிலாளர்கள் முன்னிலையில் முதலாளியை பகிரங்க மன்னிப்பு கேட்க வைத்த செயலும் தொழிலாளர்களிடையே சிறந்த வரவேற்பைப் பெற்றது.



படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்